பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

மங்கள வைபவங்களுக்
கேற்ப உடுபுடவைகள்

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூபா 3-50

★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்

மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்

ராசி சில்க்ஸ்

நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 5 சுக்கில ஞூ மாசி மீ 25 உ வெள்ளிக்கிழமை; ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 11 (09-03-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 29

அரசமைப்பின்

# 6ஆவது திருத்தத்தை நீக்குவது குறித்து அரசு பரிசீலனை!

## அமைச்சர் ரஞ்சன் தகவல்

கொழும்பு, மார்ச், 9

இலங்கை அரசமைப்புச் சட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவது குறித்து இலங்கை அரசு பரிசிலனை செய்து வருகிறது.

விடுதலைப் புலிகளின் கோரிக்கையை அடுத்தே ஆறாவது திருத்தத்தை நீக்குவது குறித்து ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா ஆலோசிக்கிறார்.

வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்பு துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்னா இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

பிரிவினைக்கு எதிராக, இலங்கை அரசமைப்புக்கு விசுவாசமாக சத்தியப்பிரமாணம் செய்ய நிர்ப்பந்திக்கும் சட்டத் திருத்தமே அரசமைப்புக்குக் கொண்டு வரப்பட்ட ஆறாவது திருத்தமாகும்.

இதனை நீக்குவது குறித்தே அரசாங்கம் தற்போது ஆலோசனை செய்து வருகிறது.

நேற்று வாராந்தர அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்னா செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.

அங்கு அவர் இந்த விடயம் குறித்து மேலும் சொன்னதாவது;

விடுதலைப் புலிகள் இயக்கம், ஜனநாயக வழிக்கு வருவதற்கு சில சிரமங்கள் இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளனர். அவர்களின் சுயமரியாதைக்கும் கௌரவத்திற்கும் இடையூறு ஏற்படாத வகையில் அர

(5ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



இனி 'இன்டர் சிற்றியிலை பறந்து போய் பறந்து வரலாம் எண்டு சொல்லுங்கோ...

# இன்று முதல் இரவு ரயில் திங்கள் முதல் இன்டர்சிற்றி

கொழும்பு, மார்ச், 9

ஜனாதிபதி பிரேமதாஸா விடுத்த உத்தரவுகளை அடுத்து கொழும்பு – காங்கேசன் இரவுநேர ரயில்சேவை இன்று தொடக்கம் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்படுகிறது.

எனினும் நாளையே இங்கிருந்து (காங்கேசன்) இரவு நேர ரயில்சேவை ஆரம்பமாகும்.

இதேவேளை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் கொழும்பு – யாழ்ப்பாணம் 'இன்டர்சிட்டி' கடுகதி ரயில் சேவையும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இரவு ரயில்
புதிய நேரசூசிகையின்படி

(5ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்காவில் தங்க விற்பனை நிலையம்!

கொழும்பு, மார்ச். 9

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தங்கம், வெள்ளி விற்பனை நிலையம் ஒன்று அடுத்த மாத முற்பகுதியில் திறந்து வைக்கப்படும்.

இத்தகவலை நிதி, கொள்கை, உருவாக்கல், செயற்படுத்தல் அமைச்சின் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியினால் இந்நிலையம் திறக்கப்

(5ஆம் பக்கம் பார்க்க)

## சார்க் மாநாடு குறித்து அடுத்த மாதம் இறுதி முடிவு

கொழும்பு, மார்ச்,9

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அடுத்த மாதம் இலங்கைக்கு வருவார்.

அதன் பின்னரே சார்க் மாநாடு நடைபெறும் திகதி பற்றி முடிவு செய்யப்படும்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார். (உ-எ)

## மக்கள் கூடிநின்று அஞ்சலி!

நேற்று முன்தினம் இரவு முதல் மக்களின்அஞ்சலிக்காக யாழ் நகரில் வைக்கப்பட்டிருந்த மேஜர் காண்டீபனின் பூதவுடல் நேற்று நண்பகல் அவரது சொந்த இடமான சண்டாவளைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

யாழ் கே. கே. எஸ். வீதியில் மனோகரா தியேட்டர் சந்திக்கு அண்மையில் விடுதலைப் புலிகளின் முகாமில் மக்களின்அஞ்சலிக்காக மேஜர் காண்டீபனின் பூதவுடல் நேற்று வைக்கப்பட்டிருந்தது. அப்போது பொதுமக்கள் சோகத்துடன் கூடி நின்று அவரது பூதவுடலுக்கு தமது இறுதி அஞ்சலியைத் செலுத்தினர்.

புலிக்கொடியால் மூடப்பட்டிருந்த காண்டீபனின் பூதவுடல் நேற்று நண்பகல் 12-30 மணிக்கு யாழ். கே. கே. எஸ்.

(5ஆம் பக்கம் பார்க்க)

படை வாபஸுக்கு முன்னேற்பாடு:

# இந்திய அமைதிப் படையினர் சீனக்குடாவில் ஒன்றுகூடுகின்றனர்

## "ஜனசமுத்ரா" கப்பலில் டாங்கிகள்

கொழும்பு, மார்ச் 9

திருகோணமலை நகரத்திலும் அதை அண்டிய பகுதிகளிலும் தற்போது தங்கியிருக்கும் இந்திய அமைதிப படையினர் தமது முகாம்களை மூடிக்கொண்டு சீனன்குடா ''கிளப்பன் பேர்க்'' பகுதிக்குச் சென்றுகொண்டிருக்கின்றனர்.

இரண்டொரு தினங்களில் அனேகமாக எல்லா முகாம்களும் மூடப்பட்டு படையினர் 'கிளப்பன் பேர்க்' சென்று விடுவர் எனத் தெரிய வருகிறது.

இதேவேளை —

பிறிமா இறங்குதுறையில் 'ஜனசமுத்ரா' என்ற கப்பல் தரித்து நிற்பதாகவும் —

அக்கப்பலில் டாங்கிகள் மற்றும் கனரக வாகனங்களை ஏற்றும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

அனேகமாக இக்கப்பல் படையினரையும் ஏற்றிக் கொண்டு இன்று புறப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க, நேற்று முன்தினம் திருமலையில் இருந்து ஆயிரத்து500 ஜவான்கள் தாயகம் புறப்பட்டனர் என்றும், அவர்களுடன் தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்களும் ஆதரவாளர்களும் தமிழகம் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## சோகத்தில் நகரம்!

யாழ்ப்பாணம், மார்ச் 9

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி மேஜர் காண்டீபன் மறைவினால் வட பகுதி நேற்று முற்றாக சோகத்தில் ஆழ்ந்திருந்தது.

குடாநாட்டில் சகல பகுதிகளிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. நகரின் வீதிகள் எங்கும் தோரணங்கள், வாழைகள், கமுகுகள் கட்டப்பட்டிருந்தன. ஆங்காங்கே ஒலிபெருக்கிகளில் சோக கீதம் ஒலித்துக்கொண்டிருந்தது.

நேற்று குடாநாட்டில் குறிப்பாக யாழ். நகரில் வழமை நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது. கடைகள், வங்கிகள், பொது நிறுவனங்கள் பூட்டப்பட்டிருந்தன. அரசாங்க அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள் அனேகமாக

(5ஆம் பக்கம் பார்க்க)

## ஜனதாதளத்தில் வலம்புரிஜான்

சென்னை, மார்ச் 9

அ. தி. மு. க முன்னாள் எம். பி வலம்புரிஜான் ஜனதாதளம் கட்சியில் சேர்ந்தார்.

தமிழகத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட

# 3,000 தமிழ் தேசிய ராணுவத்தினர் மீண்டும் இலங்கை வருகின்றனர்

## நாடாளுமன்றத்தில் அஷ்வர் எம். பி. தகவல்

கொழும்பு, மார்ச் 9

இந்தியப் படைகளுடன் சேர்ந்து தமிழ்நாட்டிற்குச் சென்றிருக்கும் சுமார் 3 ஆயிரம் தமிழ் தேசிய இராணுவத்தினர் தமிழகத்திலிருந்து இயங்குவதற்கு அனுமதி அளிக்க தமிழக முதல்வர் கருணாநிதி மறுத்துவிட்டார்.

அதனை அடுத்து அவர்கள் ஆயுதங்களுடன் கப்பல்களில் இலங்கை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள்.

—இத்தகவலை நேற்று நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி எம். பி. ஜனாப் ஏ. எச். எம். அஷ்வர் வெளியிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

இது தேசிய பாதுகாப்புக்கு முக்கியமான விடயம்.

அவர்களை இலங்கையின் எந்தத் துறைமுகத்தில் இறங்க அனுமதித்தாலும் அதன் விளைவு சட்ட, ஒழுங்கு நிலைமையைப் பெரிதும் பாதிக்கும்.

அதேநேரம் அவர்கள் இங்கு இறங்கியதும் மீண்டும் காடுகளுக்குச் சென்று தாக்குதல்களை ஆரம்பிப்பார்கள். அது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகிவிடும்.

[5 ஆம் பக்கம்பார்க்க]

## திருமலையில்

திருகோணமலை, மார்ச் 9

திருகோணமலையில் மாகாண சபைக்குச் சொந்தமான பல இலட்ச ரூபா பெறுமதியான ஓடியோ, வீடியோ எலக்ரோனிக் தொலைக் காட்சி உபகரணங்கள், அன்ரனா என்பன களவாடப்பட்டுள்ளன. [இ 150]

# ரஞ்சன் கேட்டதன் பேரில் கலைஞர் திருப்பி அனுப்புகிறார்!

கொழும்பு, மார்ச் 9

நான் கேட்டுக்கொண்டதன் பேரில்தான் கலைஞர் கருணாநிதி தமிழ் தேசிய இராணுவத்தினரை திருப்பி அனுப்புகிறார்.

- இப்படிக் கூறினார் வெளிவிவகார அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்னா.

தமிழ் தேசிய இராணுவத்தைச் சேர்ந்த 3 ஆயிரம் பேர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டதாக நாடாளுமன்றத்தில் வெளியான செய்தி குறித்து செய்தியாளர்கள் கேட்டபோதே அவர் இப்படிச் சொன்னார்.

''இலங்கைக்கு அவர்கள் வந்தால் அவர்களுக்கு எதிராக நாம் நடவடிக்கைஏதும் எடுக்க மாட்டோம்'' என்றும் அவர்

(5ஆம் பக்கம் பார்க்க)

## சுப நேரம்

9 - 3 - 1990

வெள்ளிக்கிழமை மாசி 25

சுப நேரம்:
6-24 முதல் 7-54 வரை

ராகுகாலம்:
10-54 முதல் 12-24வரை

## 18 மீனவருக்கு உபகரணங்கள்

ஆனசக்தித் திட்டத்தின் கீழ் முதல் முறையாக குருநகர் மேற்குப் பகுதியைச் சேர்ந்த 18 மீனவர்களுக்கு ரூ. 8 ஆயிரம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் கடனுக்கு வழங்கப்பட்டன. (இ-3)

## ஊர்ஜிதம் இல்லை!

யாழ்ப்பாணம், மார்ச் 9

ஆயிரம் தமிழ் தேசிய இராணுவத்தினர் தமிழக அரசால் திருப்பி அனுப்பப்பட்டு. இலங்கை நோக்கி வந்துகொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி எம். பியான ஜனாப் அஷ்வர் வெளியிட்ட தகவல் சரியா என்பது குறித்து நேற்றிரவு வரை ஊர்ஜிதமான செய்தி ஏதும் உதயனுக்குக் கிடைக்கவில்லை.

வெளிநாட்டில்
உள்ள உங்கள் உறவினர்களுக்கு
அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக
★ கடிதங்கள்
★ பார்சல்கள்
★ தஸ்தாவேஜுக்கள்
ஆகியவற்றை அனுப்ப
உடன் தொடர்பு கொள்ளுங்கள்
DHL WORLDWIDE EXPRESS
337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காயம், பீட்றூட், கோவா விதைகள் விற்பனைக்குண்டு பிள்ளையார், 259, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (2819)

### For Sale

Typewriters - New Standard English Typewriters Available Contact: Fudo 39/17. Power House Road, 3rd Lane, Jaffna (Near: Shabra-Samy & Co) (C/3951)

### 90 ஆம் அண்டுப் பஞ்சாங்கம்

இரகு வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணிதப் பஞ்சாங்கம் பெரும் திரளாக விற்பனைக்கு உண்டு. தங்களின் சகல ஆவணங்களும் மிகவும் தெளிவாக போட்டோஸ்ரத், எடுத்துக்கொள்ள மக்மிலன் புத்தகசாலை No 3. பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-3977)

### 90ஆம் ஆண்டு பஞ்சாங்கம்

இரகுநாதையர் வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கம் வியாபாரிகட்கு தொகையாக விசேட கழிவுடன் விற்பனைக்குண்டு. ஸ்ரீகாந் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம். (சி/3487)

### அச்சடிக்கும் திருமண அழைப்பிதழ்

சகல டிசைன்களிலும் அச்சடிக்கும் திருமண அழைப்பிதழ் கார்ட்டுகள் விற்பனைக்கு உண்டு. ஸ்ரீகாந் புத்தகசாலை, (பஸ் நிலையம் முன்பாக) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/3486)

### தேவை

ஈழத்தின் பிரபல இசைத் தென்றல் பரமேஸ் கோணேஸ் குழுவின் முன்னணிப் பாடகர் வின்ரோ மகேந்திரா ஆரம்பிக்கும் இசைக்குழுவிற்கு பாடகர்கள், பாடகிகள், இசைக்கருவிகள் மீட்டுவதில் திறமையுள்ளவர்கள் உடன் தேவை. இல. 6, நவீன சந்தை, மேல்மாடி யாழ்ப்பாணம், 17, கோவில் வீதி, யாழ்ப்பாணம். [12008]

புடவை வியாபார ஸ்தாபனத்துக்கு பெண் காசாளர் ஒருவரும், வியாபாரத்தில் அனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. நேரில் வரவும். ஏசியன் ரெக்ஸ்ரைல்ஸ். பலாலி வீதி, திருநெல்வேலி. (2820)

தானியம் மற்றும் மாவகைகள் அரைக்கும் மில்லில் ஆள் தேவை. சம்பளம் நேரில். Trufood Grinders, 41, Kandappa Segaram 1st Lane, ஹரன் சினிமா ஒழுங்கை, யாழ்ப்பாணம். (12014)

பத்திரிகை மொத்த விற்பனை [Paper Merchant) நிறுவனத்திற்கு விற்பனையாளர் இருவரும், விற்பனை உதவியாளர் இருவரும், உடன் தேவை 35 வயதிற்கு உட்பட்டவராகவும், முன் அனுபவம் உடையவராகவும் இருப்பது விரும்பத்தக்கது. Ganga Enterprises, 358 K. K S Road, Jaffna. (சி/3963)

புரியாணி தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்களுடன் ரீ மேக்கர் வேலை தெரிந்தவர்களும், வெயிட்டர் வேலை செய்யக்கூடியவர்களும், கடையில் தங்கி காசாளர் வேலை செய்யக்கூடியவர்களும் தேவை. நேரில் வரவும். நிக்சோ ஹோட்டல், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (2811)

### டிலிவரி சைக்கிள் தேவை

நல்ல நிலையில் டிலிவரி சைக்கிள் வைத்திருப்பவர்கள் உடன் நேரில் தொடர்பு கொள்ளவும். அருண் மார்க்கெட்டிங் அன் அட்வேர்ட்டைசிங் சேவிஸ், 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்) (சி/3451)

### சங்கீதம்

இசை முத்துக்கள் (26 அரிய கீர்த்தனங்களும், 7 அழகான பண்ணிசை தேவாரங்களும் சுர, தாளக் குறிப்புடன்) பதிப்பாசிரியர் க.ச. கனகசிங்கம் இசை ஆய்வாளர் விலை ரூபா 35/- விற்பனையாளர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (C/3490)

### காணவில்லை

வயது 18, உயரம் 5 அடி' கறுப்பு நிறமுடைய கலா என அழைக்கப்படும் பெண்ணை 4-3-90 முதல் காணவில்லை. இவரைக் காண்பவர்கள் தயவுசெய்து கீழ்க் காணும் முகவரிக்குத் தெரியப்படுத்தவும். திருமதி யேசுதாசன், இல. 04, றக்கா வீதி, யாழ்ப்பாணம். (12017)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் எவ்வகையான பிரச்சினைகளையும் உன்னதமான மட்டக்களப்பு ஆரூட மாந்திரீகமுறைப்படி அரச அங்கீகாரம்பெற்றுள்ள பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரால் வெற்றிகரமாய் தீர்வு காணப்படும். தொடர்பு கொள்ளுங்கள்: ''சக்தி சரவணா 210, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். (யாழ் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக) வியாழன் விடுமுறை. (2832)

## 91 A/L விஞ்ஞான மாணவர்கட்கு

★ அசேதன இரசாயனம் ★

10 - 03 - 90 சனி, 2-30 p.m Sat, Sun 2-30 p.m.

ஆசிரியர்: Mr நாகரெட்ணம், B. Sc.

மணல் தறை லேன், கந்தர்மடம். (சி/3498)

## தட்டெழுத்தாளர் தேவை

யாழ் நகரில் உள்ள தனியார் நிறுவனமொன்றிற்கு ஆண் தட்டெழுத்தாளர் தேவை. தமிழ், ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கும் Stencil Cutting மொழி பெயர்க்கும் திறமை உள்ளவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

20 - 03 - 1990 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

635, C/o உதயன் யாழ்ப்பாணம். [சி-3956]

## O/L 1990 (March) மாணவர்களுக்கு இலவச பயிற்சி பரீட்சை

1. பரீட்சைகள் இலவசமாக நடாத்தப்படும்.
2. இவ்வருடம் காலம் போதாததால் மாணவர்களுக்கு [கணிதம், விஞ்ஞானம்] இரண்டு பாடமும் மட்டுமே நடாத்தப்படும். பரீட்சை பின்போடப்பட்டால் அனைத்து பாடங்களும் நடைபெறும்.
3. O/L பரீட்சைக்கு புதிய பழைய பாடத்திட்டத்தின் படி தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் இப்பரீட்சையில் தோற்றலாம்.
4. (March) 12 ஆம் திகதிக்கு முன்னர் நிறுவனத்தின் காரியாலயத்தில் சுட்டெண்ணை அடையாள அட்டை காட்டி பெற்றுக் கொள்ள வேண்டும்.
5. பரீட்சைக்கான நேர அட்டவணை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

Free Exam Unit

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

Red - No — 12141 [சி-3493]

மாசி மக இலட்சார்ச்சனை

## பெருவிழா

### ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்

கொக்குவில்

10-03-1990 சனிக்கிழமை காலை 5.30 மணிக்கு சங்காபிஷேகம்

காலை 7.30 — இரவு 7.00 வரை இலட்சார்ச்சனை

விசேஷ நாதஸ்வர — தவில் இசையும் — வில்லிசையும் இடம் பெறும்

11-03-1990 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணி மகேஸ்வர பூசை

அன்னையின் அருள் பெற்று உய்யுமாறு வேண்டுகிறோம்

பரிபாலனசபை

[சி-3976]

# இலவச பயிற்சிப் பரீட்சை

யாழ்ப்பாணம் மார்ச் 9

ஜீ. சி. ஈ (சாதாரணதர) மாணவர்களுக்கு இலவசப் பயிற்சிப் பரீட்சை ஒன்றை விக்னா டியூசன் சென்ரர் நடத்தவுள்ளது. கணிதம், விஞ்ஞானம் ஆகிய இரண்டு பாடங்களுக்கு இந்தப் பரீட்சை நடத்தப்படும்.

ஜீ. சி. ஈ (சாதாரணதர) புதிய, பழைய பாடத் திட்டத்தின்படி தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் இப் பரீட்சையில் தோற்றலாம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் விக்னா டியூசன் சென்ரர் காரியாலயத்தில் சுட்டெண்ணை அடையாள அட்டை காட்டிப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## முதல் பரிசு



பருத்தித்துறை, மார்ச் 9

கொழும்பு தமிழ் சங்கத்தால் அகில இலங்கைரீதியில் நடத்தப்பட்ட நாவன்மைப் போட்டியில் ''பண்புடையார் பட்டுண்டு உலகம்'' என்ற தலைப்பில் பேசி சிரேஷ்ட பிரிவில் முதல் பரிசை பெற்றார். செல்வி. சிவானந்தி நடராசா.

இவர் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரியில் ஜீ. சி. ஈ. உயர்தர விஞ்ஞான பிரிவில் கல்வி கற்றார். (இ-118)

## மெய்வல்லுனர் போட்டிகள்

குருநகர் மார்ச் 9

யாழ். தெற்கு கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையிலான இறுதி மெய்வல்லுனர் போட்டிகள் யாழ் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மைதானத்தில் 9ஆம், 10ஆம் திகதிகளில் நடைபெற இருக்கின்றன. (க-51)

## விளை. போட்டி

கோப்பாய் மார்ச்.9

கோப்பாய் கொத்தணிபாடசாலைகளின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக மாநகர மடக் கோட்டக்கல்வி அதிகாரி திருமதி ஏ. துரைசிங்கம் கலந்து கொள்வார். (க-72)

## COMPUTER PROGRMMING

Super Basic Programming

New Batch Starting on 10-03-1990 Sat & Sun Batch) 2p.m.

## U. C. M. A. Academy

Hospital View

(Hospital Junction)

ATCHUVELY. (2751)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

சேதப்படுத்தப்பட்ட கட்டிடங்கள் விற்பதற்கான

### கேள்வி அறிவித்தல் பின்போடுதல்

மேற்படி விடயமாக உதயன் பத்திரிகையின் 25 - 02 - 1990 ஆம் திகதிய இதழில் வெளியான கேள்வி அறிவித்தல் பற்றிய விபரம் கீழ்க்காணும் விபரப்படியின் போடப்பட்டுள்ளன.

1. கேள்விப் படிவங்கள் வழங்குவது: 21 - 03 - 1990 நண்பகல் 12-00 மணி வரை
2. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 23 - 03 - 1990 நண்பகல் 12-00 மணி வரை

வி. பி. பாலசிங்கம்,
ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

[சி-3978]

## உடனடி வேலைவாய்ப்பு

ஈராக் நாட்டில் கட்டிட வேலைத் தொழிலாளர்கள் தேவை.

வயது: 18 வயதிற்கு மேல்

சம்பளம்: 4000 ரூபா (இலங்கைக்கு அனுப்பக் கூடியது)

ஒப்பந்த காலம்: 2 வருடங்கள் மேலும் 2 வருடங்கள் புதுப்பிக்கக் கூடியது.

★ இருப்பிட வசதி, உணவு, வைத்தியவசதி அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.

★ விருப்பமானவர்கள் பாஸ்போட்டுடனும் 10 பாஸ்போட் அளவு படத்துடனும் உடனடியாக வக்ஸ்சோல் மில் கோப்பரேசனின் பிரதிநிதியாகிய திரு. மூர்த்தி அவர்களை கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

உடனடியாகத் தொடர்பு கொள்பவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும்.

தொடர்புகொள்ளும் முகவரி:

No. 15, டாம் வீதி,
ஐந்து லாம்பு சந்தி, கொழும்பு - 12
TP. 433221 [12002]

## French Language Course

### பிரெஞ்சு மொழி வகுப்புகள்

(யாழ் பிரெஞ்சிய நட்புறவுச் சங்கத்தில்)

For Beginners and others. Term Commences on 10th March Saturday at 9 a.m.

Information and Registration

## Alliance Francaise de Jaffna

130, 1st Cross Street,
JAFFNA. [சி-3466]

உலக பண்பாட்டு இயக்க 15 ஆவது ஆண்டு நிறைவு மகாநாடு

## மாபெரும் கண்காட்சி

கண்காட்சிக்கு ஈழத்து நாவல்கள், பத்திரிகை, சிற்பங்கள், ஓவியங்கள், கைப்பணிப் பொருட்கள் போன்றவை இடம்பெறும்.

ஈழத்து எழுத்தாளரும், மாணவர்களும், நிறுவனங்களும் பங்குபற்றலாம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

கண்காட்சி பொறுப்பாளர்
M. ஜெயந்தன்.
விக்னா டியூசன் சென்ரர்,
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(சி/3494)

## தான்சன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். றோட் — தெல்லிப்பழை

O/L WEEK END CLASSES DEC — 90

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

வகுப்புநேரம்: காலை 7 மணிமுதல் பி.ப. 2 மணிவரை

ஆரம்பம்: 10-03-90 (சனி) காலை 7 மணி

### நேர அட்டவணை

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — 7 மணி | — J. R. சூரி |
| கணிதம் | — 8 மணி | — மதி |
| தமிழ் | — 9 மணி | — கணேஷ் |
| கணிதம் | — 10 மணி | — மகேந்திரன் |
| சமூகக்கல்வி | — 11 மணி | — திருக்குமார் |
| ஆங்கிலம் | — 12 மணி | — ஹரிதாஸ் |
| வர்த்தகம் | — 1 மணி | — வரதன் |

★ தூர இடத்து மாணவரின் நலன் கருதி இவ்வாண்டு முதல் ஆரம்பிக்கின்றோம்.

[சி-3433]

## ★ சவூதி அரேபியா ★

## வேலைவாய்ப்பு - SOMC

| | | | |
|---|---|---|---|
| 1. | Civil Engineer | ... B.Sc. | — 1800 SR |
| 2. | Mech Engineer | ... B.Sc. | — 2500 SR |
| 3. | Electric / Electronic Engineer | ... B.Sc. | — 2500 SR |
| 4. | Telephone Technician | ... Dip | — 900 SR |
| 5. | General Electrical Technician | ... Dip | — 900 SR |
| 6. | Electronics Technician | ... Dip | — 900 SR |
| 7. | Auto Elecrical Technician | ... Dip | — 800 SR |
| 8. | Pump Mechanic | ... Dip | — 700 SR |
| 9. | General Technician | ... Dip | — 700 SR |
| 10. | Plumper | ... Dip | — 600 SR |
| 11. | Painter | | — 500 SR |
| 12. | Electrician | ... Dip | — 600 SR |
| 13. | Female Cleaners | ... Dip | — 400 SR |
| 14. | Sheet Metal Worker | | — 600 SR |
| 15. | Washer | | — 300 SR |
| 16. | Laundry Press Labourers | | — 700 SR |
| 17. | Laundry Labourer | | — 300 SR |
| 18. | Tailor | | — 600 SR |
| 19. | Labourers | | — 300 SR |

★ நேர்முகப் பரீட்சை 10 - 03 1990 கொழும்பில் நடைபெறும்.

● விபரங்களுக்கு நேரில் சந்தியுங்கள்.

## A. தவச்செல்வம் (B.Sc. Hons)

நெல்லியான் றோட்,
சுழிபுரம்.

(சி-ச3960)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்

**பொருள்:**
கீழ்மக்கள் தமக்குக் கீழ்ப்பட்டவராய் நடப்பவரைக் கண்டால், அவரை விடத் தாம் மேம்பாடு உடையவராய் இறுமாப்படைவர்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
09- 03- 1990 சு. டெ இலக்கம் : 23

# போக்குவரத்து ஒழுங்கு தேவை

வழமையான சிவில் நிர்வாகத்துக்கு வேகமாகத் திரும்பிக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணம் இன்று பல்வேறு தேவைகளை அவசரமாக நிறைவேற்றவேண்டிய நிலையில் இருந்து வருகிறது.

தேவைகளிலவீதிப்போக்குவரத்து, சூழல் பாதுகாப்பு, நகரை சுத்தமாக வைத்திருத்தல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்

சூழல்பாதுகாப்பு நகரைச் சுத்தமாக வைத்திருத்தல் ஆகியவை தொடர்பாக ஏற்கனவே ஆலோசனைகள் பெறப்பட்டு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

சூழல் பாதுகாப்புத் தொடர்பாக யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தலைமையில் கருத்தரங்கு நடத்தப்பட்டு பல்வேறு ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன.

அதே போன்று யாழ் நகரப்பகுதியைச் சுத்தமாக வைத்திருக்கும் திட்டம் ஒன்று குறித்து யாழ். மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இந்த மூன்று அம்சங்களிலும் மிகவும் அவசரமாகச் செயற்படுத்த வேண்டியது வீதிப்போக்குவரத்து ஒழுங்குகளே.

முன் எப்போதும் இல்லாதவாறு யாழ்ப்பாணத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. மினிபஸ்கள், ஒட்டோக்களின் வேகம் கட்டுப்படுத்தப்படாததால் தினமும் ஏதாவது ஒருவிபத்து நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. உயிர்கள் வீணே பலியாகின்றன. இந்த வரிசையில் கடைசியாகப் பலியாகி இருப்பவர் தமிழீழ விடுதலைப் புலிகள் போராளி மேஜர் காண்டீபன். மேலும் உயிர் பலிகள் தொடரமுன் இவற்றைத் தடுத்து நிறுத்த ஏதாவது ஒரு நடவடிக்கை அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி விட்டு ஷெல்லடிக்கும் துப்பாக்கிச் சூட்டுக்கும் அஞ்சிக் கொண்டிருந்த நிலைமை சில காலங்களுக்கு முன் பெற்றோருக்கு இருந்தது.

ஷெல்லடி, துப்பாக்கிக்குண்டு தற்போது இல்லாத போதிலும் அதே அச்சநிலை மீண்டும் பெற்றோருக்கு ஏற்பட்டு வருகிறது. அவற்றின் இடத்தை வாகனங்கள் எடுத்து வருவதே இதற்குக் காரணம்.

யாழ்ப்பாணத்தில் வாகன விபத்துக்களுக்கு முக்கிய காரணம் வேகமே. அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றுவது, போக்குவரத்துக்கு உதவாத வாகனங்களைப் பயன்படுத்துவது ஆகியவையும் இதற்குக் காரணம் ஆகும்.

பெரும்பாலான வீதிகள், குண்டும் குழிகளுமாகவே காணப்படுகின்றன. வாகன ஒட்டிகள் வீதிகளில் உள்ள குழிகளைப் பார்த்து வாகனங்களைச் செலுத்துகிறார்களே தவிர பாதசாரிகளைக் கவனிப்பது இல்லை.

வீதிப் போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்போது நடைபாதை வியாபாரமும் இடமாற்றப்பட வேண்டும்.

இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு வீதிப்போக்குவரத்து ஒழுங்குகளை சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக மேற்கொள்வார்களாக.

# சேர்.முத்துக்குமாரசுவாமி விழா: மானிப்பாய் பெருமையடைகிறது

## நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில் உரை

''சேர். ரா. பி. சேதுப்பிள்ளைக்கு கௌரவப்பட்டம் வழங்கியதால் சென்னைப் பல்கலைக்கழகம் பெருமை அடைந்தது. அதே போல சேர். முத்துக்குமாரசுவாமி போன்றோருக்கு விழா எடுப்பதன் மூலம் மானிப்பாய்ப் பிரதேசம் பெருமை அடைகின்றது.''

இவ்வாறு கூறினார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சரித்திரப்பேராசிரியர் திரு. எஸ்.ஏ. சிற்றம்பலம்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி வாகீசர் மண்டபத்தில் சேர். முத்துக்குமாரசுவாமியின் வாழ்க்கை பற்றிய நூலை அவர் வெளியிட்டு வைத்து உரையாற்றினார்.

மானிப்பாய் திரு. சின்னத்தம்பி குமாரசுவாமியால் ஆக்கப்பட்ட இந் நூலை மானிப்பாய் கோவிற்பற்று இந்து சமய விருத்திச் சங்கத்தினர் வெளியிட்டுள்ளனர்.

விழா ஆரம்பத்தில் திரு. குமாரசுவாமிப்பிள்ளையின் உருவப்படத்தை பேராசிரியர் திரு.சிற்றம்பலம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்துசமய விருத்திச் சங்கத் தலைவர் திரு. இராமநாதன் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

பேராசிரியர் திரு. எஸ். ஏ சிற்றம்பலம் மேலும் பேசுகையில்

தமக்குஅப்பால் ஒரு சமுதாயம் இருக்கின்றது என்பதை உணர்த்து வாழ்ந்த பலர் மானிப்பாயில் உள்ளனர். பேராசிரியர் நவரத்தினம். கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி, நவாலியூர் சோமசுந்தரப்புலவர், திரு. முத்துக்குமாரசுவாமி போன்றோர் அவர்களுள் சிலர்.

## வேண்டுகோள்

யாழ் செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையத்தினர் கைதடியில் தொழில் நிலையம்ஒன்றை அமைத்து இனிப்பு வகைகளை உற்பத்தி செய்து வருகிறார்கள்.

இந்தப் பொருள்களை வாங்கி தமக்கு உதவும்படி அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-3)

## கிராம சேவையாளருக்கு பாராட்டு

புதுக்குடியிருப்பு, மார்ச் 9

புதுக்குடியிருப்பு, உதவி ஆணையாளர் பணிமனையில் ஒன்பது கிராம சேவையாளர்களுக்கு சேவை நலம்பாராட்டும் பிரிவுபசார விழாவும் நடைபெற்றன.

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு இவர்கள் சேர்க்கப் பட்டுள்ளதை ஒட்டியே இந்த பரிசளிப்பு விழா நடைபெற்றது.

பாராட்டு விழா உதவி ஆணையாளர் திரு. அ. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது. (இ-126)

## நூல்வெளியீடு

யாழ்ப்பாணம் மார்ச் 9

''வல்லிபுர மாயவன்பிள்ளைத்தமிழ்'' நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஊரெழு கணேச வித்தியாசாலை மண்டபம்'' திருவாசக சுவாமிகள் அரங்கில் நடைபெறும் இவ்விழாவிற்கு யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் தலைமை வகிப்பார்.

தலைமைப் பேருரையை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும், நூலாசிரியர் பண்டிதர் மு. கந்தையாவை கௌரவித்துக் கலாநிதி வித்துவான் க.நவேலனும் உரையாற்றுவார்கள். (ச-சி)

## மருதனாமடம் கோட்டம்

# உடற்பயிற்சி முடிவுகள்

மானிப்பாய், மார்ச் 9

மருதனாமட கோட்டக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டிகள் இராமநாதன் கல்லூரியில் கல்வி அதிகாரி திரு. பொ. சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்றன.

உடற்கல்விக் கல்வி அதிகாரிகள் திரு. க.நாகமணி, திரு. த. அருணகிரிநாதன் ஆகியோர்பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

இக்கோட்டத்தை சேர்ந்த 21 பாடசாலைகளில் இருந்து 47 குழுக்கள் இப்போட்டிகளில் கலந்து கொண்டன.

இப்போட்டிகளில்முதல்இரு இடங்களை பெற்ற பாடசாலைக் குழுக்கள் இம்மாதம் 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ள மாவட்ட உடற்பயிற்சிப் போட்டிகளில் கலந்துகொள்ளத் தகுதி பெற்றுள்ளன.

கோட்டமட்டத்திலான போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற பாடசாலைகள் விவரம்வருமாறு.

13 வயது ஆண்கள் 1. சுதுமலை சிந்மயபாரதி வித்தியாசாலை, 2. இடைக்காடு மகாவித்தியாலயம், 3. சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

பெண்கள் 1-அச்சுவேலி சென்திரேசா மகாவித்தியாலயம், 2. உடுவில் மகளிர் கல்லூரி, 3. சுதுமலை சிந்மயபாரதி வித்தியாசாலை.

17 வயது ஆண்கள் 1 உரும்பராய் இந்துக்கல்லூரி, 2. சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி, 3. மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.

பெண்கள் 1- இராமநாதன் கல்லூரி, 2. அச்சுவேலி சென்திரேசா மகாவித்தியாலயம், 3 உடுவில் மகளிர் கல்லூரி,

19 வயது ஆண்கள் 1 சுதுமலை சிந்மயபாரதி வித்தியாசாலை, 2. உடுவில் முருகமூர்த்திவித்தியாசாலை, 3. சோமாஸ்கந்தா கல்லூரி

பெண்கள் 1 இராமநாதன் கல்லூரி, 2. உடுவில் மகளிர் கல்லூரி. 3. சுன்னாகம்ஸ்கந்தவரோதயா கல்லூரி.

(இ-90)

## தேசிய கல்வி நிறுவனம்

# எண்பதாயிரம் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க நடவடிக்கை

கொழும்பு மார்ச் 9

பயிற்றப்படாத 80 ஆயிரம் ஆசிரியர்களுக்கு புதிதாக பயிற்சியளிக்கப் படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை தேசிய கல்வி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இவர்களுக்கான பயிற்சிகள் நான்கு வருட காலத்துக்குள் முடிக்கப்படும்.

தேசிய கல்வி நிறுவனத்தின் இத் திட்டத்தின் கீழ் 25 ஆயிரம் பேருக்குபயிற்சி வழங்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பயிற்சியளிக்கப்படவுள்ள ஆசிரியர்களுக்கு முதலில் 9 நாள் அடிப்படைப்பயிற்சியும், அதன்பின் பகுதி நேர அடிப்படையில் 3 தொடக்கம் 4 ஆண்டுபயிற்சியும் அளிக்கப்படும் எனத் தேசிய கல்வி நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தருகையில் கூறியதாவது:-

இலங்கையில் உள்ள ஆசிரியர்களுள் 50 வீதமானவர்கள் பயிற்றப்படாத ஆசிரியர்களே. புதிதாக அண்மையில் நியமிக்கப் பட்ட 25 ஆயிரம் பயிற்சி ஆசிரியர்களினால் 35 சதவீதமாக இருந்த பயிற்றப்படாத ஆசிரியர்களின் தொகை 50 சதவீதமாக அதிகரித்துள்ளது நாடு முழுவதும் உள்ள 1 லட்சத்து 75 ஆயிரம் ஆசிரியர்களில் 88 ஆயிரம் பேர் பயிற்றப்படாதவர்களாக விளங்குகின்றனர் என ஆய்வில் இருந்து தெரியவருகிறது. மேலும் இந்நிறுவனம் 4,400 பட்டதாரி ஆசிரியர்களுக்கும் பயிற்சி வழங்கி வருகிறது.

(க)

# முல்லைத்தீவு: நெல்விலைவீழ்ச்சி

ஒட்டுசுட்டான் மார்ச் 9

முல்லைத்தீவு பகுதியில் நெல்லின் விலை வீழ்ச்சியடைந்து வருகிறது.

தற்பொழுது ஒரு மூடை நெல் 450 ரூபாவாக விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படுகிறது.

இதே வேளை ஒரு கிலோ உழுந்து 10/- ரூபாவாகவும் நிலக்கடலை 20 - ரூபாவாகவும் கொள்வனவு செய்யப்படுகிறது.

( இ - 113 )

## இலங்கை வங்கி

# நெல்லியடிக் கிளையில் நிவாரணம்

கரவெட்டி மார்ச் 9

நெல்லியடி இலங்கை வங்கியில் இரண்டாம் கட்ட நிவாரணம் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் வழங்கப் படவுள்ளது. ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளாகவே நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

(இ-70)

# வங்கிகள் இயங்கும் நேரம்

யாழ்ப்பாணம் மார்ச் 9

யாழ் மாவட்ட வங்கிகள் அனைத்தும் வாடிக்கையாளர்களின் நலன் கருதி காலை 9 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை திறந்திருக்கும்.

திங்கட்கிழமை மட்டும் 9 மணியில் இருந்து 1 மணி வரை வங்கிகள் திறந்திருக்கும்.

இதற்கான ஏற்பாடுகள் கடந்த வாரம் வங்கி உயரதிகாரிகள் கலந்து கொண்ட மாநாட்டில் மேற்கொள்ளப் பட்டன.

( இ 10 )

## எரிந்த சடலங்கள்

கொழும்பு, மார்ச் 9

அரைகுறையாக எரிந்த நிலையில் மேலும் பல உடல்கள் தென் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டன, என்று கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

மினுவாங்கொட பொலிஸ் பகுதியில் அளுத்பொல என்னும் இடத்தில் பதினைந்துக்கும் அதிகமான சடலங்கள் கடந்த திங்கட்கிழமை கண்டுபிடிக்கப்பட்டன.

( உ எ)

# பனம் உற்பத்திப் பொருள்கள் வெளிநாட்டில் சந்தைப்படுத்தப்படும்

## இந்தியா, தாய்லாந்து அதிகாரிகள் குழு வருகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 9

'' வெளிநாட்டில் பனம் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த இந்தியா, தாய்லாந்து அதிகாரிகள் குழு விரைவில் இங்கு வரவிருக்கிறது''

இப்படிக் கூறினார் பனை அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு. கே. நடராசா

நேற்று முன்தினம் பத்திரிகையாளர்மாநாட்டில் அவர் இதைக் கூறினார்.

அவர் கூறிய மேலும் சில தகவல்கள் வருமாறு.

★ பனம் பழத்தில் இருந்து சாராயம் உற்பத்தி செய்ய முறை ஆராய்ச்சிகள் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

★ பனை பற்றிய முழு ஆய்வை மேற்கொள்ளஐ.நா. அபிவிருத்தி நிதியம் 2 கோடி 40 லட்சம் ரூபா வழங்கியுள்ளது.

★ பனைத்துறையில் மூவர் எம். எஸ். சி. பட்டம் பெற்றுள்ளனர்.

★ பனையை குட்டையாக்க ஆராச்சி நடைபெறுகிறது.

★ ஜேர்மனியர் பனம் பழத்தை சிறந்ததாக தெரிவு செய்துள்ளனர்.

★ திக்கம் சாராய வடிசாலை விரைவில் இயங்கவிருக்கிறது. (இ-72)

## அரச அதிபர் பொறுப்பேற்பு

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்ப்பாண அரசாங்க அதிபராகதிரு அன்ரன் அல்பிரட் நேற்று முன் தினம்பொறுப்பேற்றுக் கொண்டார்.

யாழ்ப்பாண பதில் அரச அதிபராகக் கடமையாற்றிய திரு. கே. மாணிக்கவாசகர் நேற்று முதல் கிளிநொச்சி அரச அதிபராகச் செயற்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-10]

# கோப்பாய் - யாழ் பஸ்சேவை ஆரம்பிக்கக் கோரிக்கை

கோப்பாய் மார்ச் 9

கோப்பாய்- யாழ்ப்பாணம் பஸ் சேவையை வடபிராந்திய போக்குவரத்து சபை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்.

கோப்பாய் பஸ் பயணிகள் சங்கம் மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

வடபிராந்திய முகாமையாளருக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி உள்ளது.

(இ- 72)

# லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரி ஆண்டிறுதிப் பரீட்சை முடிவுகள்

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில் 1989 டிசம்பர் மாதம் நடைபெற்ற ஆண்டிறுதிப் பரீட்சையில் சித்தி அடைந்தோர் விவரம்:-

### 1ஆம் வருடம்

முதற் பிரிவு:

செல்வன் எஸ். தில்லைநாதன், செல்வி எஸ். சிவானி

இரண்டாம் மேற்பிரிவு

செல்வன் எஸ். சந்திரபாலன், செல்வி எஸ். சுகந்தி, செல்வி. கே. ஜெயவதனா, திருமதி எச். [illegible]

சாதாரண சித்தி

செல்வன் எஸ். புண்ணியகுமாரன், செல்வன் எவ். ஏ. மரியதாஸ், செல்வி கே. குணதேவி.

### இரண்டாம் வருடம்

முதற் பிரிவு

செல்வி அ. தேவரஞ்சனி, செல்வி தி. கலாரதி.

இரண்டாம் மேற் பிரிவு

செல்வன் ப.சத்தியநாதன்.

இரண்டாம் கீழ் பிரிவு

செல்வி எஸ். லிங்கனமலர்,

சாதாரண சித்தி

செல்வன் கே. ஜீவானந்தம், செல்வன் வே. சிவஜெயம், செல்வி எஸ். உஷா.

## ஆபத்து அலவன்ஸ்

முல்லைதீவு மாவட்டத்தில் உள்ள கிராம சேவையாளர்களுக்கு ஆபத்து அலவன்ஸ் இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரியவருகின்றது ஏனைய உத்தியோகத்தர்களுக்கு இந்த அலவன்ஸ் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க126)

## வாசகர் திருமுகம்

### காங்கேசன்துறை கல்லூரி வீதி

காங்கேசன்துறையில் உள்ள கல்லூரி வீதியும் அதில் உள்ள பாலமும் மக்கள் பாவனைக்கு உதவாத அளவிற்கு மிகவும் இடிந்தும் சிதைந்தும் உள்ளன.

அதிலும் குறிப்பாக அவ்வீதியில் உள்ள பாலம் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக இடிந்து அதில் பாரிய கிடங்கு ஒன்று உருவாகியதால் அவ் வீதியால் செல்லும் நடைபாதை சைக்கிள் மட்டிகள் கூட அதற்குள் விழுந்து எழும்பாமல் செல்ல முடிவதில்லை இத்தோடு இவ் வீதியில்தான் யாழ்ப்பாணத்தின் பெரிய கல்லூரிகளில் ஒன்றான நடேஸ்வராக்கல்லூரியும் அமைந்திருப்பதால் இக் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும். பெற்றோர்களும் பெரிதும் சிரமப்பட வேண்டியுள்ளது இதனால் இது சம்பந்தப்பட்டவர்களை இக்குறைபாடுகளை மிகவிரைவில் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

ந. கலைச்செல்வன்.
தையிட்டி.

### வீதியின் அவல நிலை

கண்டி வீதியில் இருந்து ஆரம்பமாகி ஆழியவளை கடற்கரையடி வரை செல்லும் பிரதான வீதி அவல நிலையில் உள்ளது

இவ் வீதியின் இரு மருங்கிலும், நடுவிலும் ஒன்றரை அடி ஆழ கிடங்குகள் ஏற்பட்டுள்ளன. பெரிய கற்கள் பல சிதறுண்டு அங்கும் இங்குமாக கிடக்கின்றன. இந்த வீதியைத் திருத்த சம்பந்தப்பட்டவர்கள் முன்வருவார்களா?

என்.மனோகரன்.
ஆழியவளை.

### பஸ் சேவை சீராகுமா?

கடந்த சில வருடங்களாக தடைப்பட்டிருந்த பருத்தித்துறையிலிருந்து சாவகச்சேரி செல்லும் 754 இலக்க பஸ் சேவை மீண்டும் நடக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா? இச்சேவை மீண்டும் நடைபெறுமாயின் பொதுமக்கள் பெரிதும்பயன்பெறுவார்கள்

கனகேஸ்வரன்,
துன்னாலை.

## கண்டதும் கேட்டதும்

பொருட்களின் விலை உயர்வு இன்று சர்வசாதரண விஷயம்.

கிடுகிடுவென்று ஒரு பொருளின் விலை ஏறும். ஆனால் இறங்கும் போது மெதுமெதுவாகத்தான் இறங்கும்

இந்த நிலைமையுடன் சமாளித்து வாழ மக்கள் இப்பொழுது பழகிக் கொள்கிறார்கள். கஷ்டமான பயிற்சிதான்.

அதுமட்டும் அல்ல சில பொருட்களின் விலை இடத்துக்கு இடம் மாறுபட்டும் இருக்கிறது. ஏன் அப்படி என்ற கேள்வியை எழுப்புவோரும் குறைவு. எழுப்பினாலும் பதில் கிடையாது.

மாணவர்கள் பயன்படுத்தும் அப்பியாசக் கொப்பிகளும் இந்த விலை ஏற்ற இறக்கத்துக்கு உட்பட்டவையாக இருக்கின்றன.

வன்னியிலிருந்து ஒரு அன்பர் எமக்கு எழுதியிருக்கிறார்.

ஒரு கிலோ உழுந்தைக் கொண்டு போய் விற்றும் அப்பியாசக் கொப்பி ஒன்றை வாங்க முடியவில்லையாம்.

அப்பியாசக் கொப்பிக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டினால் அவற்றைத் கனியார் பலர் தயாரித்தார்கள். இதனால் நிதான விலை என்பது இல்லாது போயுள்ளது.

எங்கும் எதிலும் நிதானமின்மைதான் இன்றைய நிலை போலும்

—செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற விரும்பும் பல குரல் கலைஞர்

கேரளமாநிலம்த்திருசூரைச் சேர்ந்தவர் நசீர் வயது 27.

இவர் தொடர்ந்து ஐந்து மணி நேரம் நிறுத்தாமல் பல குரல் எழுப்பி சாதனை படைத்துள்ளார்,

தமது பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறும் என்று அவர் நம்பிக்கை வைத்திருக்கிறார்.

ஒரு மணி நேரத்தில் இருநூறுக்கும் மேற்பட்ட குரல்களை (மிமிக்ரி) எழுப்பக் கூடிய இவர் இதுவரை, சுமார் 950 இடங்களில் நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கிறார்.

# நிக்கரகுவாவுக்கு இராணுவ உதவி கியூபா அரசாங்கம் நிறுத்தியது!

## சிவில்யுத்தம் ஏற்படும் என காஸ்ட்ரோ எச்சரிக்கை

ஹவானா, மார்ச் 8

நிக்கரகுவாவுடனான இராணுவத் தொடர்புகளை கியூபா துண்டித்துக் கொண்டது.

இது சம்பந்தமான அறிவிப்பை கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ நேற்று வெளியிட்டார்.

இதுவரை நிக்கரகுவாவை இடதுசாரி சான்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணித் தலைவரான ஜெனரல் ஒற்றேகா ஆட்சி புரிந்தார்.

அண்மையில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் திரு. ஒற்றேகா தோல்வியடைந்தார். அமெரிக்க ஆதரவு பெற்ற எதிர்க்கட்சிகள் கூட்டணி வேட்பாளர் திருமதி ஷிமாறொ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஜெனரல் ஒற்றேகா அரசுக்கு கடந்த பத்தாண்டுகளாக கியூபா இராணுவ உதவிகளை வழங்கி வந்தது.

இப்போது அதனை முற்றாகத் துண்டித்துக் கொள்ளப்போவதாக அறிவித்திருப்பது கியூபா, நிக்கரகுவாவின் புதிய அரசின் போக்கைக் கண்டிக்கும் வகையில் அமைந்துள்ளது.

திருமதி ஷிமொறாவின் ஆட்சியின் கீழ் நிக்கரகுவாவில் சிவில் யுத்தம் ஏற்படும் ஆபத்து தோன்றியிருப்பதாகவும் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ அறிவித்தார். (எ)

## 28 பேர் கொலை!

சண்டிகார், மார்ச் 8

பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியத் தீவிரவாதிகள் நடத்திய திடீர்த் தாக்குதல் ஒன்றில் 28 பொதுமக்கள் உயிரிழந்தனர். (எ)

# சீனப்பிரதமரின் ரஷ்ய விஜயம் ஏப்ரல் 23 இல் ஆரம்பமாகும்!

பீகிங், மார்ச் 8

நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு சீனப் பிரதமர் லீபெங் எதிர்வரும் ஏப்ரல் 23ஆம் திகதி சோவியத் யூனியன் செல்வார்.

அரசியல்சித்தாந்த மோதல்களைத் தவிர்த்துக் கொள்வது, இருநாடுகளுக்குக் இடையேயான பொருளாதார ஒத்துழைப்பை பெருக்கிக் கொள்வது, உள்நாட்டு விவகாரங்களில் இரு நாடுகளும் பரஸ்பரம் தலையீடு செய்வதை நிறுத்திக் கொள்வது ஆகிய விஷயங்கள் குறித்து இந்த விஜயத்தின்போது சீன-சோவியத் தலைவர்கள் பேச்சுக்கள் நடத்துவர் என்று செய்திகள் தெரிவித்தன. (எ)

# காபூல் நிலைமை இருட்டடிப்பு வெளித் தொடர்பு துண்டிப்பு!

காபூல், மார்ச் 8

அதிபர் நஜீப் தலைமைக்கு எதிராக சதிப்புரட்சி நடத்திய பின்னர் நாட்டை விட்டுத் தப்பி ஒடிய ஆப்கன் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் டைனி பாகிஸ்தானில் முஜாஹிதின் கெரில்லாக்களைச் சந்தித்தார்.

முஜாஹிதின் கெரில்லாக்களின் ஆதரவுடன் மீண்டும் ஜனாதிபதி நஜீப்பின் அரசைக் கவிழ்க்கும் முயற்சிகளில் ஈடுபட அவர் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிய வருகிறது.

இதனிடையில் தோல்வியில் முடிந்த சதிப்புரட்சியில் பங்குபற்றிய ஆப்கன் அரசுப் படையைச் சேர்ந்த 24 உயர் அதிகாரிகள் பாகிஸ்தானில் தஞ்சமடைந்தனர் என்று பி. பி. சி. அறிவித்தது.

இதேவேளை ஆப்கன் தலைநகர் காபூலுடனான வெளி உலகத் தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளன. அங்கு சண்டை தொடர்ந்து நடப்பதாகச் செய்திகள் வெளிவந்தாலும் அவை ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

# கடத்தல் பொருள் பிடிபட்டது

இராமநாதபுரம், மார்ச் 8

இராமநாதபுரம், புதுமடத்துக்கு அருகே கடற்கரையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கடத்தல் பொருள்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்.

வீடியோ ரெக்கோர்டர்கள் கஸட்டுக்கள் உட்பட பல பொருள்கள் கைப்பற்றப் பட்டன.

அவற்றின் பெறுமதி இந்தியப் பணத்தில் ஒன்றரை லட்சம் ரூபா என்று சொல்லப் படுகிறது. (எ)

# சோவியத் எச்சரிக்கை

பொன், மார்ச் 8

மேற்கு ஜேர்மனியுடன் நிபந்தனைகளின்றி கிழக்கு ஜேர்மன் இணையக்கூடாது என்று சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவர்நாட்சே எச்சரித்துள்ளார். (எ)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. ஏரம்பு தியாகராஜா**
(சுமதி ஜுவல்லறி உரிமையாளர்)

மலர்வு: 12 - 01 - 1932

உதிர்வு: 29 - 02 - 1988

திதி: 09. 03. 1990

அன்பின் ஒளிவிளக்காய், அறிவின் சிகரமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் பொக்கிஷமாய் எங்கள் குடும்பத்தின் குல தெய்வமாய் விளங்கி எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனுடன் சங்கமித்த எனதருமை தந்தையே நீங்கள் இவ்வுலகை விட்டுச்சென்று ஆண்டுகள் இரண்டு கடந்தாலும் நீங்கள் கட்டிய மனக்கோட்டையெல்லாம் கனவாய் கலைந்தாலும், என்றும் எம் நெஞ்சில் உங்கள் நினைவுகள் மாறாது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரன்,
சகோதரங்கள், மைசான்மார், மச்சாள்மார், சகலன்மார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

கலையரசி,
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

[11959]

# காஷ்மீரில் இருந்து இந்துக்கள் வெளியேறுவதை நிறுத்த முயற்சி

## மாநில ஆளுநர் வேண்டுகோள்

காஷ்மீர் பள்ளத்தாக்கில் இருந்து இந்துக்களை வெளியேற வேண்டாம் என்று மாநில ஆளுநர் ஜக்மோஹன் அவசர வேண்டுகோள் விடுத்தார்.

காஷ்மீரில் முஸ்லிம் பிரிவினை வாதிகளின் ஆயுதக் கிளர்ச்சி தீவிரமடைந்து வருவதைத் தொடர்ந்து சிறுபான்மையோராக வாழும் இந்துக்கள் பள்ளத்தாக்கில் இருந்து இந்தியாவின் ஏனைய மாநிலங்களுக்கு குடிபெயர்ந்து வருகின்றனர்.

இது பெரிய அளவில் இடம்பெறுவது மத்திய அரசுக்குக் கவலையளித்துள்ளது.

அதை அடுத்தே ஆளுநரின் அவசர வேண்டுகோள் வெளியானது.

இதனிடையில், ஸ்ரீநகரில் ஊரடங்கு தளர்த்தப்பட்ட ஐந்து மணி நேரத்தில் கிளர்ச்சிக்காரர்களும் இந்தியப் படையினரும் நேரடி மோதலில் ஈடுபட்டனர்

அப்போது இரண்டு இந்திய ஜவான்கள் கொல்லப்பட்டனர். (எ)

# புதுச்சேரியில் கூட்டு அமைச்சரவை

புதுவை, மார்ச் 8

பாண்டிச்சேரியில் அமையும் தேசிய முன்னணி அமைச்சரவையில் தி.மு.க. வை சேர்ந்த மூவரும் ஜனதா தளத்தைச் சேர்ந்த இருவரும் சுயேச்சை எம். எல். ஏ. ஒருவரும் அங்கம் வகிக்கின்றனர்.

முதலமைச்சராக தி.மு.க. மாநிலத்தலைவராக திரு டி. இராமச்சந்திரன் இருக்கிறார். (எ)

# உலகத் தமிழர் மாநாடு ஆகஸ்டில் கோலாலம்பூரில்

சென்னை, மார்ச் 8

கோலாலம்பூரில் உள்ள தமிழர்கள் உலக சம்மேளனத்தின் முதலாவது சர்வதேச மாநாடு எதிர்வரும் ஆகஸ்ட் 19 முதல் 21 வரை கோலாம்பூரில்நடைபெறவுள்ளது.

உலக நாடுகளில் வாழும் தமிழர்களின் கலை, கலாசார மற்றும் பொருளாதார வளர்ச்சி அவர்களின் எதிர்காலம் பற்றி இம் மாநாட்டில் ஆராயப்படும் என்று சம்மேளனத் தலைவர் டாக்டர் வி. டேவிட் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் இருந்து 200 பிரதிநிதிகள் உட்பட 500 க்கு அதிகமான பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்வார்.

மாநாட்டை ஆரம்பித்து வைக்க தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி அழைக்கப் படுவார்.

'உலகத் தமிழரின் நலன்களும் வளர்ச்சியும்' என்ற தலைப்பிலே மாநாட்டில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படும்.

மேற்கு ஜேர்மனி, அமெரிக்கா, இங்கிலாந்து, மொரிஷியஸ், இலங்கை, பிஜி ஆகிய நாடுகளும் இம்மாநாட்டுக்கு பிரதிநிதிகளை அனுப்பிவைக்க இருக்கின்றன.

இதே வேளை— உலகத் தமிழர் பல்கலைக்கழகம் ஒன்றை அமைப்பது சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று வருகிற ஜூன் ஜூலை மாதங்களில் கோலாலம்பூரில் நடைபெறும்.

இது சம்பந்தமான ஆய்வு ஒன்றை நடத்த அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சிட்டிபாபு தலைமையிலான குழு ஒன்று நியமிக்கப் பட்டுள்ளது. (எ)

# சமுதாய முன்னேற்றத்தின் வெளிப்பாடே சோவியத் சோஷலிசத்தின் புதிய வடிவம்!

- அனைதொலி புதெங்கா -

சோவியத் நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வரும்பெரட்ஸ்ரோயிக்கா கொள்கை, சோஷலிசத்தைத் தகர்க்கும் நோக்கம் கொண்டதல்ல. சோஷலிசத்தை புனரமைப்பதும், நவீன உருவம் கொண்ட சோஷலிசத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு புதிய மாதிரியான சமுதாயத்தைக் கட்டுவதுமே இந்தக் கொள்கையின் நோக்கம் என்று, இந்தக் கொள்கையைப் படைத்தளித்த சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி கூறுகிறது.

சோஷலிசத்தில் புதிய தோற்றம் என்றால் என்ன?

## புதிய தோற்றம்

சமுதாய முன்னேற்றம் என்னும் புறவயப் போக்குகளின் வெளிப்பாடே இந்தப் புதிய வடிவம். எந்த ஒரு சமுதாய அமைப்பையும் போலவே, சோஷலிச சமுதாயமும் பொருளாதார, தொழில்நுட்ப, விஞ்ஞான, சமூக - அரசியல்' நல்லொழுக்க, சித்தாந்த உறவு முறைகளை உள்ளடக்கியதாக இருக்கிறது.

உழைக்கும் மக்களை சுரண்டலிலிருந்தும், ஒடுக்கு முறையிலிருந்தும் விடுவித்து அவர்களை சமூக வாழ்க்கையில் எஜமானர்களாக மாற்றும் சமுதாய அமைப்பே சோஷலிசம் ஆகும்.

ஒவ்வொருவரின் சுதந்திரமான வளர்ச்சியும் எல்லாரது சுதந்திரமான வளர்ச்சிக்கு அடிபடை என்றநிலைமையை உருவாக்கும் அமைப்பே சோஷலிசமாகும்.

தொழிலாளி வர்க்கத்தினது சமூகப் புரட்சியில் சாராம்சத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் ''உழைப்பாளிகளின் விடுதலை'' என்று மார்க்ஸ் கூறினார்.

ஆனால் இந்தக் கோட்பாட்டை ஸ்டாலினும் அவரது ஆதரவாளர்களும் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் சோஷலிசத்தின் லட்சியம் என்பது மனிதனை மனிதன் சுரண்டுவதிலிருந்து விடுதலை என்று மட்டுமே குறுக்கிக் கொச்சைப்படுத்தி[illegible]டார்கள்.

மனிதனை மனிதன் அடக்கி ஒடுக்குவதிலிருந்து விடுதலை என்பது பற்றி அவர்கள் எதுவுமே பேசவில்லை.

## சுரண்டல் -ஒடுக்கு முறை வியாக்கியானம்

சுரண்டல் என்பதும் ஒடுக்கு முறை என்பதும் வெவ்வேறு விஷயங்கள்.

மற்றவர்கள் உருவாக்குகிற உபரியான உற்பத்திப் பொருள்களை அபகரித்துக் கொள்வதே சுரண்டலாகும்.

அதேவேளையில், ஒடுக்கு முறை என்பது மற்றவர்களின் எண்ணத்தை, சுதந்திரத்தை அடக்கி ஒடுக்குவதற்கும் மார்க்சின் கோட்பாட்டை இவ்வாறு குறுக்கி இழிவுபடுத்தியதற்குக் காரணம் இருக்கிறது.

ஸ்டாலின் உருவாக்கிய ,'ராணுவக் கொட்டடி பாணி சோஷலித்தை'' நியாயப்படுத்துவதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டது. இந்த 'பாசறைபாணி சோஷலிசம்' அதிகாரவர்க்க ஆட்சிக்கு ஆபத்து ஏற்படாமல் உத்தரவாதம் அளித்தது.

பொருளாதாரச் சுதந்திரம் படைத்த குடிமக்கள் ஒன்றிணைந்த ஓர் சமூகம் என்ற வகையில் ஒரு நாகரீக சமுதாயத்தை உருவாக்குவதும் புதிய பாணி சோஷலிசத்தின் மற்றொரு அம்சமாகும்.

அதாவது, இந்த சமுதாயத்தின்பொருளாதார அடித்தளம் - அரசுடமை. கூட்டுப் பண்ணை உடமை என்ற- சோஷலிச உடைமையின் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு வடிவங்களை மட்டுமே சார்ந்திருக்காது.

இந்த இரண்டு வடிவங்களும் ஒன்றாகிவிடும் என்று சோவியத் யூனியனில் அண்மைக்காலம் வரையில் கருதப்பட்டு வந்தது.

மாறாக இந்தப் புதிய சமுதாயத்தின் பொருளாதார அடித்தளமானது, உழைக்கும் மனிதர்களின் தேவைகள் மற்றும் [illegible]பட்ட பல்வேறு வகையான சோஷலிச உடைமை வடிவங்களைச் சார்ந்ததாக இருக்கும்.

## மார்க்ஸ்- ஏங்கெல்ஸ்

மார்க்சும், ஏங்கெல்சும் சோஷலிச சமுதாயத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், பண்டங்களைவாங்கும் விலைக்கு விற்கும் நிலமை இல்லாத, வர்க்கங்கள் இல்லாத, அரசாங்கம் இல்லாத மக்களே நேரடியாக அரசியலின்றி, ஆட்சி புரியும் சமுதாயம் என்று கூறினார்கள்,

சோஷலிச வளர்ச்சியின் எல்லாக் கட்டங்களிலும் அரசாங்கம் இருக்கும். (அதாவது அதிகாரவர்க்கம் இருக்கும்) என்று ஸ்டாலின் கூறினார்.

மார்க்ஸ், எங்கெல்ஸ் கூறியதைப் போல அல்லாமலும் ஸ்டாலின் கூறியதற்கு எதிராகவும் சோஷலிசத்தின் புதிய படிமம். பின்வருமாறு இருக்கும்

சோஷலிச சமுதாயம் பண்டங்களை விலைக்கு வாங்கவும் விலைக்கு விற்கவுமான நிலைமையைக் கொண்ட சமுதாயமாக, வர்க்கங்களைக் கொண்ட சமுதாயமாக, அரசியல் கொண்ட சமுதாயமாக, இருக்கும்.

ஆனல் அரசாங்கத்தையும் அதிகார வர்க்கத்தையும் நீடித்து நிலைக்க வைப்பதோ, இதன் மூலம் உழைக்கும் மக்களை ஆட்சியதிகாரத்திலிருந்து விலக்கி வைப்பதோ மார்க்சியவாதிகளின் விருப்பமல்ல.

மக்களின் சோஷலிச அரசியல் சுய - நிர்வாகம் என்ற வகையில் செயல்படும் மக்களின் உண்மையான அரசியல் ஆட்சியை உறுதிப்படுத்த வேண்டிய அவசியமாகும்.

இதனை' அரசாங்கம் அற்ற மக்களின் சுய - நிர்வாகம் என்ற நிலைக்கு படிப்படியாக வளர்த்துச் செல்ல வேண்டும்.

ஜனநாயகம், திறந்த கொள்கை ஆகிய புதிய அம்சங்களுடனும், குடிமக்களின் உரிமைகள் சுதந்திரங்கள் விரிவடைந்து வருவதுடனும் ஆட்சியாளர்களின் செயல்பாடுகள் மீது மக்களின் கட்டுப்பாடு அதிகரித்து வருவதுடனும் இந்த வளர்ச்சி பின்னிப்பிணைந்துள்ளது.

அதிகாரிகளை மக்களின் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வர வேண்டியது அவசியமாகும்; மக்கள் அதிகாரத்துக்கான அமைப்பை உருவாக்க வேண்டியதும் அவசியமாகும்.

சோவியத் நாட்டுக்கு இன்றுதேவையான சோஷலிசத்தின் முக்கிய அம்சங்கள் இவைதான்.

(-நொவஸ்தி செய்தி நிறுவனம்)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. சம்பந்தர் தில்லைநாதன்**
(ஓய்வுபெற்ற பார்மஸிஸ்ட்)

அன்னையின் மடியில்: 07 - 11 - 1936

ஆண்டவன் அடியில் 07 - 02 - 1990

அன்பின் உருவமாய், பண்பின் இருப்பிடமாய் எம்மை வளர்த்து வாழ வைத்த தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மகன்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துணிகள்,
மற்றும் குடும்பத்தினர்.

இலங்கைநாயகி அம்மன் கோயிலடி,
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

[12016]


கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி

**லொறி பொடி (பழையது) பகிரங்க ஏல விற்பனை**

மேற்படி எமது சங்கத்திற்குச் சொந்தமான லொறியின் பொடி (பழையது) 16-03-1990 வெள்ளிக்கிழமை மு. பகல் 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் இலக்கம் 70, அரசடி றோட், பரகன் டீசல் என்ஜினியேஸ், கராஜ்யில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். ஏல விற்பனையில் கேள்வி கேட்க விரும்புவோர். மீளளிக்கப்படாத தொகையாக ரூபா ஐம்பதும் (50 00) மீளளிப்புச் செய்யக்கூடிய தான ரூபா இருநூறு (200.00) வைப்புப் பணமாக செலுத்தல் வேண்டும். விற்பனை செய்யப்படவிருக்கும் பொடியினை பார்வையிட விரும்புவோர், மேற்படி விலாசத்திற்குச் சென்று பார்வையிடலாம்.

– பொது முகாமையாளர்

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி.
02-03-90.

[சி-3974]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரோஸை கண்டித்து வரதர் பேட்டி!

திருகோணமலை, மார்ச் 9

ஈரோஸ் இயக்கத்தின் செயற்பாட்டை வன்மையாகக் கண்டித்து வடக்கு - கிழக்கு மாகாண முதல்வர் திரு. அ. வரதராஜப்பெருமாள் பேட்டியளித்திருக்கிறார்.

உதயனுக்கு அளித்த பேட்டிஒன்றிலேயே அவர் ஈரோஸ் இயக்கத்தையும் அதன் தலைமைத்துவத்தையும் கண்டித்தார்-

அந்தப் பேட்டியில் அவர் கூறியிருப்பதாவது;

இருபத்திஐந்து லட்சம் தமிழர்களினதும் ஏக பிரதிநிதிகள் தமிமீழ விடுதலைப் புலிகள் தான் என்று அண்மைய தமது பேச்சுக்களில் ஈரோஸ் இயக்கத்தினர் குறிப்பிட்டு வருகின்றனர்.

அப்படியானால் இவர்கள் ஏன் தங்களை மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டு நாடாளுமன்றத்தில் போய் இருக்க வேண்டும்?

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் என்றால் ஈரோஸ் இயக்கம் எதற்காக? ஈரோசைக் கலைத்துவிட்டு தங்களை விடுதலைப் புலிகள் என்று அவர்கள் அறிவிக்கலாமே?

சந்தர்ப்பத்துக்கு ஏற்றமாதிரி ஈரோஸ் இயக்கத்தினர் பேசக்கூடாது.

கொள்கையின்றி சந்தர்ப்பவாதம் பேசும் இத்தகைய இயக்கங்களினால் தான் தமிழர்கள் பிளவுபட்டிருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த இயக்கங்கள் ஒற்றுமையை விரும்புவதில்லை.

சாயும் பக்கம் சாயும் இவர்கள் ஒற்றுமைக்குத் தடையாக இருக்கிறார்கள்.

உச்சியில் இருக்கும் கட்சிக்கு கொடிபிடிக்கும் இயக்கங்கள் ஒன்றை நன்கு உணர வேண்டும். இன்று தாங்கள் பேசும் பேச்சுக்கள், வெளியிடும் அறிக்கைகள் ஒவ்வொன்றும் எதிர்காலத்தில் அவர்களுக்கு எதிராகவே இருக்கப்போகின்றன. சந்தர்ப்பத்துக்கு தகுந்த பேச்சு இதற்கே வழிவகுக்கும்.

''ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய அரசுப் பேரவை'' பிரகடனம் தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் ஈரோஸ், ரெலோ எம்.பிக்கள் ஆற்றிய உரை அவர்களது உண்மைச் சொரூபத்தை மக்களுக்குக் காட்டிவிட்டது — என்றார் திரு. வரதராஜப்பெருமாள். [உ]

# காண்டீபன் பூதவுடல் தீயுடன் சங்கமம்

- நமது அலுவலகச் செய்தியாளர் ஜே. எல். மரியநாயகம் -

கடந்த புதன்கிழமையன்று காலமான விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி மேஜர் காண்டீபனின் பூதவுடல் நேற்றிரவு 7-30 மணிக்கு கண்டாவளை மயானத்தில் தியுடன் சங்கமமானது.

பெருந்திரளான மக்கள் கூடிநின்று அழ காண்டீபனின் தந்தையார் சிதைக்குத் தீ மூட்டினார்.

நேற்று நண்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்ட மேஜர் காண்டீபனின் பூதவுடல சாவகச்சேரி பொதுச்சந்தை மைதானம், கொடிகாமம், பரந்தன், கிளிநொச்சி ஆகிய இடங்களில் பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது.



கிளிநொச்சியில் கடும் மழைக்கு மத்தியிலும் மக்கள் கூடிநின்று மரணமானபோராளிக்கு அஞ்சலி செலுத்தினர்.

மயானத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் யாழ்மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்டான்லி டொமினிக், கண்டாவளைப் பகுதிப் பொறுப்பாளர் திரு. அலெக்ஸாண்டர் ஆசிரியர் திரு. தர்மரத்தினம் ஆகியோர் உரையாற்றினர்.

# ஐந்தாம் வகுப்புமுதல் தொழிற்பயிற்சி: கல்வி அமைச்சு தீர்மானம்

கொழும்பு, மார்ச். 9

சகல பாடசாலைகளிலும் 5 ஆம் வகுப்பில் இருந்து மாணவர்களுக்கு தொழிற் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதற்கேற்ப பாடத்திட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதென கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இத்தகவலை கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அவர் மேலும் தகவல் தருகையில் கூறியதாவது.

மாணவர்களுக்கு 5 ஆம் வகுப்பில் இருந்து தொழிற் பயிற்சி வழங்குவது தொடர்பாக தகுந்த பாடத் திட்டங்களை தயாரிக்கும் சேவைகள் தேசிய கல்வி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சின் இத் திட்டத்தின்படி 5ஆம் வகுப்பு தொடக்கம் மாணவர்களுக்கு கம்பியூட்டர் கல்வி, மின்சார தொழில்நுட்பம், விவசாயம், மர வேலை, மேசன் வேலை, மோட்டார் தொழில்நுட்பம் என்பன தொடர்பாக கோட்பாடுகளுடன் பயிற்சியளிக்கப் படும். (க-து)

## இன்று முதல் இரவு———

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு கோட்டையிலிருந்து இரவு 7 15 மணிக்குப் புறப்படும் இரவு யாழ் தபால் ரயில் யாழ்ப்பாணத்தை அடுத்த நாள் காலை 6.30 மணிக்கு வந்தடையும். காலை 6.40 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு காங்கேசன்துறையை காலை 7.30 மணிக்கு இந்த ரயில் சென்றடையும்.

அதேவேளை காங்கேசன் துறையில் இருந்து மாலை 5.40 மணிக்கு புறப்படும் காங்கேசன்-கொழும்பு இரவு ரயில், மாலை 6.25க்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும். யாழ் ரயில் நிலையத்தில் பத்து நிமிட நேரம் தரித்து நிற்கும் இந்த ரயில் மறுநாள் காலை 5 - 15 மணிக்கு கொழும்பு கோட்டையைச் சென்றடையும்.

### யாழ்தேவி சேவை

இதேசமயம் காலையில் நடைபெறும் யாழ்தேவி ரயில் சேவை நேரத்திலும் மாற்றம் செய்யபட்டிருக்கிறது.

தினமும் காலை 6.30 மணிக்கு காங்கேசன் துறையில் இருந்து புறப்படும் யாழ்தேவி ரயில் நாளை சனிக்கிழமை முதல் தினசரி காலை 6.15 மணிக்குப் புறப்படும்.

கொழும்பில் இருந்து புறப்படும் இரவு தபால் ரயில் காலை 6.30 மணிக்கு யாழ் ரயில் நிலையத்துக்கு வந்து சேர்வதால் இந்த நேர மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நேர மாற்றங்களை அடுத்து இரவு கொழும்பிலிருந்து புறப்பட்டு, காலையில் யாழ்ப்பாணம் வந்து சேரும் இரவு தபால் ரயிலும் -

காலையில் காங்கேசனில் இருந்து புறப்படும் யாழ்தேவி ரயிலும் ஒன்றையொன்று யாழ் ரயில் நிலையத்தில் மாறிக் கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இன்டர் சிற்றி

இதேவேளை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் —

கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து காலை 5. 45 மணிக்குப் புறப்படும் இன்டர் சிற்றி ரயில் யாழ் ரயில் நிலையத்தை நண்பகல் 12 மணிக்கு வந்தடையும்.

அன்றே பிற்பகல் ஒரு மணியளவில் யாழ் ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு, கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை அது இரவு 7. 30 க்கு சென்றடையும்.

இந்த ரயில் அநுராதபுரம் ரயில் நிலையத்தில் மட்டும் சுமார் ஐந்து நிமிட நேரம் தரித்து நிற்கும்.

பயணிகள் பத்து நாட்களுக்கு முன்னரே இந்த ரயிலுக்கான ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ - எ)

## 6 ஆவது———

சமைப்பின் ஆறாவது திருத்தத்தை கரத்துச்செய்வது பற்றி ஜனாதிபதி பிரேமதாஸா பரிசீலிப்பார்.

இலங்கையில் அனைத்து சமூகமும் ஒன்றிணைய அரசமைப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆறாவது திருத்தம் தடையாக இருக்குமானால் அது நீக்கப்படுவதில் தவறு இல்லை — என்றார். (உ-எ)

## சோகத்தில். . . .

இயங்கவில்லை.

வாகனப் போக்குவரத்தும் ஸ்தம்பித நிலையை அடைந்தது. வீதிகளில் வாகனங்கள் அதிகம் ஓடவில்லை. [உ-10-3]

# கொலைக் குற்றத்தின் பேரில் 6 சிப்பாய்கள் கைது!

கொழும்பு, மார்ச் 9

மாகாணசபை உறுப்பினர் ஒருவரின் உறவினர் ஒருவரைக் கொலை செய்த சம்பவம் தொடர்பாக கேகாலையில் முகாமிட்டுள்ள இராணுவப் பிரிவைச் சேர்ந்த ஆறு சிப்பாய்களை பொலீஸார் கைது செய்தனர்.

மாகாணசபை உறுப்பினர் தனபால எப்பிடாவத்த என்பவரின் மைத்துனரான சி. எச். இரத்னாயகா கடந்த ஆண்டு டிசம்பர் 30ஆம் திகதி இனந்தெரியாதோரால் கடத்திச்செல்லப்பட்டு கொல்லப்பட்டார். அவரின் சடலம் பின்னர் அரைகுறையாக எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

கொள்ளையடிக்கப் பட்டதாகக் கருதப்படும் 15 வாகனங்களைச் சில தினங்களுக்கு முன்னர்பொலீஸார் கொழும்பில் வைத்து கைப்பற்றினர். அதைத் தொடர்ந்தே இக் கொலை பற்றிய தகவல்கள் வெளியாகின.

ஐந்து சிப்பாய்களும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக கேகாலை இராணுவப் பிரிவு கேர்ணல் அங்கமன்ன தெரிவித்தார்.

# பணம் மோசடி செய்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஏஜன்ஸி லைஸன்ஸ் ரத்து!

கொழும்பு, மார்ச் 9

வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக்கூறி 40 லட்சம் ரூபா பணம் மோசடி செய்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜன்ஸியின் லைஸன்ஸ் ரத்துச் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

இந்த ஏஜன்ஸி தலா 4ஆயிரம் ரூபாவீதம் சுமார் ஆயிரம்பேரிடமிருந்து பணம் வசூலித்ததாகவும்—

ஆனால் உறுதி கூறப்பட்டபடி வேலைவாய்ப்பை ஏஜன்ஸி பெற்றுக் கொடுக்கவில்லை என்றும் புகாரிடப்பட்டது.

அதைத் தொடர்ந்தே லைஸன்ஸ் ரத்துச் செய்யப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத் தலைவர் டேவிட் சொய்ஸா தெரிவித்தார்- (ஒ-எ)

# டில்லியில் அதிகாரிகளுடன் படை வாபஸ் திகதி குறித்து மெஹ்ரோத்ரா ஆலோசனை

கொழும்பு, மார்ச் 9

கடைசி இந்தியத் துருப்பு வெளியேறுவதற்கான திகதியை நிர்ணயிப்பதற்காக கொழும்பிலுள்ள இந்தியத் தூதர் திரு. எல். எல், மெஹ்ரோத்ரா புதுடில்லி சென்றிருக்கிறார்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா இந்தத் தகவலை நேற்று செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

இந்தியப்படை இறுதியாக வெளியேறும் திகதி எதுவென்பது இலங்கை அரசுக்கு உத்தியோகபூர்வமாக இதுவரை அறிவிக்கப்படவில்லை என்று தெரிவித்த அமைச்சர்—

அந்த அறிவிப்பைத் தாம் எதிர்பார்த்திருப்பதாகவும் சொன்னார்.

இந்தியப்படை வெளியேறுவதில் முட்டுக்கட்டை ஏதும் இல்லை என்றும் அவர் சொன்னார்.

படை வாபஸுக்கான திகதி குறித்து இந்திய அரசின் உயரதிகாரிகளுடன் கலந்தாலோசிப்பதற்காகவே தூதர் மெஹ்ரோத்ரா புதுடில்லி சென்றதாகக் கூறப்படுகிறது. (உ-எ-8)

# தமிழீழப் பிரகடனம் குறித்து நீலன் கருத்து

கொழும்பு, மார்ச் 9

தமிழ் ஈழ சுதந்திரப் பிரகடனத்தில் உள்ள தெளிவற்ற தன்மைகளை முன்னாள் எம். பி. யும் வழக்கறிஞருமான நீலன் திருச்செல்வம் சுட்டிக் காட்டினார்.

''முதலமைச்சர் பதவியில் இருந்து விலகி விட்டதாக திரு. வரதராஜப்பெருமாள் முதலில் அறிவித்தார். பின்னர் அவர் அதனை மறுத்தார்.

''இவர் பதவி விலகல் செய்யாது மாகாணசபையும் கலைக்கப்படமாட்டாது. மாகாணசபை கலைக்கப்படாவிடில் பதவி விலகல் இருக்காது. இப்பிரகடனம் மாகாணசபையினால் நிறைவேற்றப்பட்ட சட்ட விளைவுகளைத் தொடரும் தீர்மானமே''.

இப்படி திரு. நீலன் திருச்செல்வம் சொன்னார்.

மாகாண சபையைக் கலைக்கும் அதிகாரம் அரசியல் சாசனப்படி அரசுக்கு இல்லை என்பதையும் திரு. திருச்செல்வம் சுட்டிக்காட்டினார்.

ஆனால் மாகாண சபையின் நிர்வாக அதிகாரங்களை மட்டுமே அரசு எடுத்துக்கொள்ள முடியும் என்றும், எதுவும் தமிழ்க் குழுக்களின் பகைமையையே அரசு சம்பாதித்துக் கொள்வதில்தான் முடியும் என்றும் திரு. நீலன் திருச்செல்வம் சொன்னார். [ஒ-எ]

# பொன் அணிகள் போர் இன்று வட்டுக்கோட்டையில்

யாழ்ப்பாணம் மார்ச் 9

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 73 ஆவது வருட மாபெரும் கிரிக்கெட் போட்டி '-பொன் அணிகள் போர்'- இன்றும், நாளையும் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

இன்றைய ஆட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கும் நாளைய ஆட்டம் நாளை காலை 9 மணிக்கும் ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு செல்வன் விநோதனும், சென்பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு செல்வன் ஜஸ்டினும் தலைமை வகிக்கின்றனர்-

திரு. சி. நந்தகுமார், திரு எஸ். விமலபாலன் ஆகியோர் இந்த ஆட்டத்திற்கு மத்தியஸ்தம் வகிப்பர். (உ-க)

# மோட்டார் சைக்கிள் பாவனை அதிகரிக்கிறது

கொழும்பு, மார்ச் 9

கார்களிலும்பார்க்க மோட்டார் சைக்கிள்களைப் பாவிப்போரின் எண்ணிக்கை அதிகரித்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கொழும்பு இறைவரிமாவட்டத்தில் மட்டும் 1989 ஆம் ஆண்டில் 99 ஆயிரத்து 110 பேர் மோட்டார் சைக்கிள் லைஸென்ஸ் பெற்றுள்ளனர்.

## கட்டுநாய———

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது. இது தீர்வையற்ற விற்பனை நிலையமாகச் செயற்படும்.

இந் நிலையத்தில் எதுவித கட்டுப்பாடும் இன்றி தங்கம், வெள்ளி கொள்வனவு செய்ய முடியுமாதலால், தங்க, வெள்ளிக் கடத்தலைப் பெருமளவு குறைக்கக் கூடியதாக இருக்கும் என்றும் —

இவ்விற்பனை நிலையத்தில் அந்நிய செலவாணிக்கே தங்க, வெள்ளி விற்பனை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ - து)

## ரஞ்சன்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னார்.

''திரும்பி வருவோர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தமாட்டார்களா?'' என்று கேட்டபோது -

''அவர்கள் ஆயுதத்தைக் கைவிட்டிருந்தால் விடுதலைப் புலிகள் ஏன் அவர்கள் மீது தாக்குதல்களை நடத்தப் போகிறார்கள்?'' என்று அமைச்சர் வினாவினார். (உ)

## 3.000 தமிழ்———

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்தில் இவர்களை இயங்கவிட்டால் அது தமிழகத்துக்கு ஆபத்தாகிவிடும் என அஞ்சியே தமிழக முதல்வர் அவர்களைத் திருப்பி அனுப்புகிறார்.

இவர்களை இலங்கை அரசாங்கம் என்ன செய்யப் போகிறது? இது குறித்து நிலைமையை அரசு தெளிவு படுத்த வேண்டும் — என்று கேள்வி எழுப்பினார். [உ-து]

## மக்கள் கூடி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீதியிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டபோது வழிநெடுகிலும் மாணவர்கள் கூடி நின்று மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

மேஜர் காண்டீபன் கல்வி பயின்ற யாழ் இந்துக் கல்லூரிக்கு முன்பாக அவரது பூதவுடல் வந்தபோது அங்கு குழுமி நின்ற மாணவர்கள் வரிசையாக சென்று கண்ணீர் மல்கி அஞ்சலி செலுத்தினர்.

1982 ஆம் ஆண்டில் கைதடியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்த போராளிகளின் நினைவாக யாழ் இந்துக்கல்லூரி மைதானத்திற்கு அருகில் நிறுவப்பட்டிருக்கும் நினைவுத்தூபிக்கு பக்கமாக மேஜர் காண்டீபனின் பூதவுடல் எடுத்து வரப்பட்டது

தனது மூத்த சகோதரனான விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி கேடிலினின் நினைவுத் தூபிக்கு அருகே—

அண்ணனின் வழியில் வீர மரணத்தைத் தழுவிய தம்பி காண்டீபனின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த வாகனம் தரித்து சற்று நேரம் நின்றபோது அந்தக்காட்சி அங்கு குழுமியிருந்தோரின் நெஞ்சை உருக்குவதாக அமைந்தது.

அங்கிருந்து மேஜர் காண்டீபனின் பூதவுடல் கண்டாவளைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (உ-3-19)

# செய்திச் சரம்

## விபத்தில் பெண் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

நேற்றுக் காலை கே. கே. எஸ். வீதி சி. எஸ். கே. சந்திக்குச் சமீபமாக மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் இளம் பெண் ஒருவர் காயமடைந்தார்.

ரட்ணேஸ்வரன் சாந்தாதேவி (வயது 21) என்பவரே காயமடைந்தவர். (ஒ-10)

## கட்டுத் துவக்கு வெடித்து படுகாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

எழுதுமட்டுவாள் பகுதியில் நேற்று கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்தார்.

பொன்னுத்துரை நவரத்தினம் (வயது 45) என்பவரே காயமடைந்தவராவர். இவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டுள்ளார். (ஒ-10)

## 'அலை அரசி' படகுச் சேவை

அனலைதீவு, மார்ச் 9

'அலை அரசி' மோட்டார் படகு தினமும் காலை 8 மணிக்கு ஊர்காவற்றுறையில் இருந்து புறப்பட்டு எழுவைதீவு, அனலைதீவு. ஊடாக நயினாதீவை காலை 10 மணிக்குச் சென்றடையும்.

அங்கிருந்து மீண்டும் பிற்பகல் 1.45 மணிக்குப் புறப்பட்டு அதேவழியாக ஊர்காவற்றுறை சென்றடையும் என அறிவிக்கப்பட்டது. (ஓ-18)

## எரிபொருள் விலை ஏறாது

கொழும்பு, மார்ச் 9

இந்த ஆண்டில் எரிபொருள் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது.

நிதி அமைச்சுச் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம் இத் தகவலை நேற்று முன்தினம் வெளியிட்டார்.

இன்னும் ஒரு வருடத்திற்கு எரிபொருள் விலை உயர்வு இருக்காது என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் திரு. பாஸ்கரலிங்கம் சொன்னார். (ஒ-எ)

## 720 ஆட்கொணர்வு மனுக்கள்

கொழும்பு, மார்ச் 9

1987 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் திகதி முதல் 1989 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் திகதி வரை உயர்நீதி மன்றத்தில் 720 ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இத் தகவலை நீதி துணை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ கடந்த புதன் கிழமை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார். (ஒ-எ)

## நாளை கொடி தினம்

கொழும்பத்துறை மார்ச் 9

கைதடி அனாதைகள் சைவ இல்லக்கொடி தினவிழா நாளை சனிக்கிழமை காலை 9 மணி அளவில் கைதடியில் நடைபெற உள்ளது.

15ஆவது வருடக்கொடிதின விழா சிறப்புற அமைய அன்பர்கள் அனைவரும் ஆதரவு நல்கிச்சைவச்சிறுவர் இல்லம் தனது தேவைகளை நிறைவேற்றத் தொடர்ந்துஆதரவு வழங்கும்படி யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு வே. கெ தனபாலன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ —30)

## புதிய ஆளணி அங்கீகாரம்

வட்டுக்கோட்டை மார்ச் 9

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கான புதிய ஆளணி அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது. இச்சங்கத்திற்கான 120 பணியாளர்கள் ஆளணித் திரட்டில் இடம் பெற்றுள்ளார்கள். இவ்வாளணித் திரட்டின் படி பணியாளர்கள் பதவிகள் நிரப்பப்பட்டுச் செயற்படுத்தப்படுமெனக் கூறப்பட்டது. (க-161)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைப் பிள்ளைகளின் மதிய
உணவுத் திட்டத்திற்கு உகந்தது.

**“ ஜீவாகாரம் ”**

இதில் தேவையான அளவு கலோரி, புரதம்
விற்றமின், தாதுப்பொருட்கள் அடங்கி
உள்ளது.

**அண்ணா தொழிலகம்**
**இணுவில்.**

# உதயன்

09 - 03 - 1990 வெள்ளிக்கிழமை

அருந்துங்கள்!

**‘அண்ணா கோப்பி’**

100 வீதம் சுத்தமான கோப்பியினால் தயாரிக்கப்பட்டு 100g, 50g, 15g பக்கட்டுக்களில் விற்பனையாகின்றது. இவற்றை பாவித்த பின் வெற்றுப்பைக்கட்டுக்களைக் கொடுத்து இனாம் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**அண்ணா கோப்பிக் கடை,**
**யாழ்ப்பாணம்-**

# அரசாங்க சேவையில் ஆட்சேர்ப்பு
# இன விகிதாசாரப்படியே நடக்கும்!

## தேசியக் கொள்கை திட்டவட்டமாக அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 9

அரசாங்கசேவை, மாகாணசேவை, அரசாங்க கூட்டுத்தாபன சேவை ஆகியவற்றிகு ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு தேசியக் கொள்கை ஒன்று வகுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திறமை அடிப்படையில் ஊழியர் சேர்த்துக்கொள்ளப்படுகையில் மாவட்ட சனத்தொகை விகிதாசாரத்தில் அவர்கள் எண்ணிக்கை அமைந்திருக்கும். என்றும் -

தேசிய மட்டத்தில் ஆட்சேர்ப்பும், பதவி உயர்வும் வழங்கப்படும் போது தேசிய இன சனத்தொகை அடிப்படையில் அவை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக அமைச்சர் விஜேக்கூன் சமர்ப்பித்த திட்டத்தை அமைச்சரவை நேற்று அங்கீகாரமளித்தது.

எழுதுவினைஞர் பதவிகளுக்கும் அதற்கு மேற்பட்ட பதவிகளுக்கும் ஊழியர்களைச் சேர்த்துக்கொள்வது சம்பந்தமான கொள்கைகள் தேசிய திட்டத்தில் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நியமனங்கள் அனைத்தும் அரசியல் தலையீடின்றி செய்யப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள் மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படும் போது மாகாண இன விகிதாசாரமும் —

மாவட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படும்போது மாவட்ட இனவிகிதாசாரமும் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

எழுதுவினைஞர் தரத்துக்கு கீழ்ப்பட்ட தரத்தில் உள்ள சகல வெற்றிடங்களும் மாவட்ட அடிப்படையில் நிரப்பப்படவுள்ளன.

அரச கூட்டுத்தாபனத்துறை சம்பந்தமாக விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும், மாவட்ட மட்டத்தில் உள்ள வெற்றிடங்கள், வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ள மாவட்டத்திற்கு இரண்டு மடங்கு நியமனம் என்ற அடிப்படையில் நிரப்பப்படும்.

இத் திட்டம் நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாக அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், கூட்டுத்தாபனத் தலைவர்கள், அரசுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் தகுதி வாய்ந்த அதிகாரிகள் இருப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் தெரிவு பின்வரும் விகிதாசாரத்தில் இடம்பெறும்:-

சிங்களவர் — 75 %
தமிழர் — 12 . 7 %
இந்திய வம்சாவழியினர் — 5 . 5 %
முஸ்லிம்கள் — 8 . 0 %

தெரிவுக்கான மாவட்ட ரீதியான விகிதாசாரம் வருமாறு:-

| | |
|---|---|
| கொழும்பு | — 11 . 5 % |
| கம்பஹா | — 9 . 4 % |
| களுத்துறை | — 5 . 6 % |
| கண்டி | — 7 . 1 % |
| மாத்தளை | — 2 . 4 % |
| நுவரெலியா | — 4 . 1 % |
| காலி | — 5 . 5 % |
| மாத்தறை | — 4 . 3 % |
| அம்பாந்தோட்டை | — 2 . 9 % |
| யாழ்ப்பாணம் | — 5 . 0 % |
| கிளிநொச்சி | — 0 . 6 % |
| மன்னார் | — 0 . 7 % |
| வவுனியா | — 0 . 6 % |
| முல்லைத்தீவு | — 0 . 5 % |
| திருகோணமலை | — 1 . 8 % |
| மட்டக்களப்பு | — 2 . 2 % |
| அம்பாறை | — 2 . 6 % |
| குருநாகல் | — 8 . 2 % |
| புத்தளம் | — 3 . 3 % |
| அனுராதபுரம் | — 3 . 8 % |
| பொலனறுவை | — 1 . 8 % |
| பதுளை | — 4 . 3 % |
| மொனறாகலை | — 1 . 8 % |
| இரத்தினபுரி | — 5 . 4 % |
| கேகாலை | — 4 . 6 % |

அரசாங்க அறிவித்தலில் இப்படித் தெரிவிக்கப்பட்டது. (உ)

## லக்ஸ்பிறே விலை குறைப்பு!

கொழும்பு, மார்ச் 9

லக்ஸ்பிறே பால்மாவின் விலைகள்இன்றுமுதல் குறைக்கப்படுகின்றன.

இதனை அமைச்சர்ஏ. ஆர். மன்சூர் நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில்அறிவித்தார்.

பக்கெட்டுக்களின் புதிய விலைகள் வருமாறு:

100 கிராம்—11 ரூபா 40 சதம்
250 கிராம்—25 ரூபா 95 சதம்
400 கிராம்— 40ரூபா 40 சதம்
500 கிராம்— 50 ரூபா
1000 கிராம் —98 ரூபா 50 சதம்

## விபத்தில் சிக்கியவர் மரணமானார்

யாழ்ப்பாணம், மார்ச் 9

விபத்து ஒன்றில் சிக்கி காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று மரணமானார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த சபாபதி கந்தசாமி (வயது 64) என்பவரே மரணமானவர் ஆவர்.

கடந்த 28 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக மோட்டார் சைக்கிளும்-சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளான போது இவர் காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

## ஜீ. சி. ஈ. பரீட்சைக்கான ஏற்பாடுகள் துரிதம்

யாழ்ப்பாணம், மார்ச். 9

எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜீ. சி. ஈ. [சாதாரணம்] பரீட்சைக்கான ஏற்பாடுகளை யாழ். கல்வித் திணைக்களம் செய்து வருகிறது.

179 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெற இருக்கிறது.

பரீட்சை இணைப்பாளர்கள் நோக்குநர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பரீட்சைக்கு தேவையான காகிதாதிகள் கொழும்பில் இருந்து யாழ். கல்வித்திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளன. [இ-3]

## யாழ். பல்கலைக்கழகம்:
## புதிய மாணவர் அனுமதி மே மாதமா? ஆகஸ்ட் மாதமா?

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ் பல்கலைக் கழக புதிய மாணவர்களை மே மாதத்திலா? ஆகஸ்ட் மாதத்திலா? அனுமதிப்பது என்ற விடயத்தில் இழுபறி நிலை உருவாகியுள்ளது.

யாழ் பல்கலைக்கழகத்துக்கு இவ்வாண்டு 868 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் தற்சமயம் ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்கும், வெளிக்களப் பயிற்சிக்கும் சென்று வருகிறார்கள்.

இவர்களுக்கான அனுமதியை மே மாதத்தில் வழங்க யாழ் பல்கலைக்கழகம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

ஆனால் மற்றைய பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்கும் போது தான் யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அனுமதி வழங்க வேண்டும் என்று பல்கலைக் கழக ஆணைக்கு கூறிவருகிறது.

ஆகஸ்ட் மாதத்திலேயே மற்றைய பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்கப்பட இருக்கிறது.

இந்த இழுபறி நிலையால் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் 4 மாதங்கள் பிந்தியே அனுமதிபெற வேண்டிய நிலை உருவாகியுள்ளது. (இ-3)

**கிறிஸ்துவுக்காக இளைஞர் சங்கம்**
யாழ்ப்பாணம்.

**“பெற்றோர் நிகழ்ச்சி”**
[பெற்றோர் / இளைஞர்]

இடம்:- FIG மண்டபம் [சென் ஜோன்ஸ் ஆலய மண்டபம்]

காலம்:- 10-03-1990 சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிமுதல் 5.30 மணிவரை

அனைவரையும்
★ அன்புடன் அழைக்கின்றோம் ★
நன்றி

கிறிஸ்துவுக்காக இளைஞர் சங்கம்
462, பிரதான வீதி,
சுண்டுக்குளி

[2744]

## மாகாண சபைக்குரிய கார், ‘பிக்கப்’ அபகரிப்பு

திருகோணமலை, மார்ச் 9

வடக்கு, கிழக்கு மாகாண சபைக்குரிய இரு கார்களும், ஒரு ‘பிக்-அப்’ வானும் பறிபோயிருக்கின்றன.

மாகாணசபையின் செயலாளர் திரு. என். கிருஷ்ணமூர்த்தியினதும், மாகாண சபையின் காணி, விவசாய அமைச்சின் செயலாளர் திரு. எஸ். சிவதாசனினதும் கார்களே அபகரிக்கப் பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (உ-150)

## மகளிர் தினக்கூட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 9

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நேற்று கருத்தரங்குகளும் கூட்டங்களும் நடைபெற்றன.

மகளிரின் சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும் என்று கோரும் சுவரொட்டிகள் எங்கும் காணப்பட்டன,

யாழ் பல்கலைக் கழகத்தில் நேற்று மூன்று கூட்டங்கள் நடைபெற்றன.

ஒருகூட்டம் மறுமலர்ச்சி மன்ற ஆதரவில் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

மற்றது பல்கலைக் கழக பெண்கள் அமைப்பால்செல்வநாயக மண்டபத்தில் நடாத்தப்பட்டது,

மூன்றாவது கூட்டம் சிக்கன கடனுதவிச்சங்க சமாசத்தால் பல்கலைக்கழக மேல் மாடியில் நடாத்தப்பட்டது. (இ-3)

## மோதிலால் ஜனாதிபதிசட்டத்தரணி

கொழும்பு, மார்ச் 9

பத்து சட்டத்தரணிகள் ஜனாதிபதி பிரேமதாசா முன்னிலையில் ஜனாதிபதி சட்டத்தரணிகளாகநேற்று நியமிக்கப்பட்டனர். இவர்களில் ஜனாப் எம். எல். முகமது அமீனும் திரு. வி. எரி. மோதிலால் நேருவும் அடங்குகின்றனர். (உ-எ)

## நாளையும், நாளை மறுதினமும்
## வடமராட்சி மக்களுக்கு மீளக் குடியமர்வு நிவாரணம்
### யாழ்.மக்கள் வங்கியில் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 9

மக்கள் வங்கியின் யாழ், பிரதான வீதிக் கிளையில் நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் வடமராட்சி மக்களுக்கான மீளக்குடியமர்தல் இரண்டாம் கட்ட நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

சனிக்கிழமை உடுப்பிட்டி (ஜே/182), உடுப்பிட்டி வடக்கு (ஜே/183), இமையாணன் (ஜே/187), வல்வெட்டி (ஜே/184) ஆகிய கிராம சேவைப் பிரிவுகளுக்கும் —

ஞாயிற்றுக்கிழமை கரணவாய் வடக்கு (ஜே/185), கரணவாய் மேற்கு (ஜே/179), கரணவாய் தெற்கு (ஜே/178) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக்கும் நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

காலை 8-00 மணி முதல் நண்பகல் 1-00 மணி வரை நிவாரணம் வழங்கப்படும் என்றும் தங்கள் பகுதி கிராம சேவையாளருடன் தொடர்பு கொண்டு வங்கிப் பதிவு இலக்கத்தினைப் பெற்றுக்கொண்டு வருமாறும் வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது. [ஒ-10]

## இலங்கை வங்கிக் கிளைகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 9

இலங்கை வங்கிக் கிளைகளில் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

### நெல்லியடியில்

நாளை இலங்கை வங்கி நெல்லியடிக் கிளையில் உடுப்பிட்டி கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 304 குடும்பங்களுக்கும், உடுப்பிட்டி வடக்கைச் சேர்ந்த 196 குடும்பங்களுக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

### பருத்தித்துறையில்

நாளை இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையில் வல்வெட்டித்துறை தெற்கு கி. சே. பிரிவைச் சேர்ந்த 811 குடும்பங்களுக்கும், தொண்டமானாறு கி. சே. பிரிவைச் சேர்ந்த 621 குடும்பங்களுக்கும் நிவாரணப் பணம் வழங்கப்படும்.

### ஸ்ரான்லி வீதியில்

நாளை இலங்கை வங்கி யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் கொக்குவில் மத்தியைச் சேர்ந்த ஆயிரத்து 105 குடும்பங்களுக்கும் நாளை மறுதினம் அதே வங்கியில் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த ஆயிரத்து 165 குடும்பங்களுக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்படும். (ஒ-?)

## சிற்றூழியருக்கு பதவி உயர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 9

வடபகுதி இலங்கை வங்கிக் கிளைகளைச் சேர்ந்த 24 சிற்றூழியர்கள் எழுதுவினைஞர் பதவிகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். (இ-10)

## நளை வரை பதியலாம்

யாழ்ப்பாணம் மார்ச் 9

யாழ்- பல்கலைக்கழக புதிய மாணவர்கள் நாளை 10ஆம் திகதி வரை தமது பெயரைப் பதிவு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி வரையே புதிய ஆண்டு மாணவர்கள் பதிவை மேற்கொள்ளலாம் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

## மரண அறிவித்தல்கள்

### திரு. கோ. நவரத்தினம்

திருவாளர் கோ. நவரத்தினம் அவர்கள் 8-3-90 வியாழக்கிழமை மு. ப. 11. 15 மணிக்கு காலமானார்.

இவர் கோவிந்தம்மாவின் அன்புக்கணவரும், கொழும்பு தெமட்டகொட தமிழ் மகா வித்தியாலய ஆசிரியர் ந. தவபாலசிங்கம் அவர்களின் தகப்பனாரும், கொம்பனித்தெரு புதிய செபமாலை மாதா தமிழ் வித்தியாலய ஆசிரியை திருமதி அனுசூயா தவபாலசிங்கம் அவர்களின் மாமனாரும் இளைப்பாறிய தபாலதிகாரி K. கிருஷ்ணசாமி, கொழும்பு நகர அபிவிருத்தி திட்டமிடல் இலாகா இளைப்பாறிய உயர் அதிகாரி K. நடராசா - திருமதி கோ. தங்கம்மா, திருமதி அ. பாலகிருஷ்ணசாமி, திருமதி. இரத்தினம் பிரான்சிஸ் ஆகியோரின் மூத்த சகோதரருமாவார்.

பூதவுடல் 9- 3- 90 வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிகு கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தவர்கள்.

15, யாழ் வீதி,
யாழ்ப்பாணம், (2756)

### செல்லையா கந்தசாமி

கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த செல்லையா கந்தசாமி இறைவனடி எய்தினார். இவர் நல்லம்மாவின் அன்புக் கணவரும், இராஜபத்மநாயகி (போதனாசிரியர், தாதியர் பயிற்சிப் பாடசாலை யாழ்ப்பாணம்), புஸ்பநாயகி (U. K.) மகேந்திரராசா, மனோகரராசா, (சவுதி), அருள்நாயகி, சுகுணநாயகி (U. K.), நாகேஸ்வரி (U. K.), லக்கிராஜா (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தந்தையும், மோகன் (U. K.), யோகேஸ்வரி, யோகேந்திரராணி, சிவகுமார், லூவின் (U. K.), பிறேவர் (U. K.), ஆகியோரின் அன்பு மாமனாரும், புஸ்பகாந்தன் (சுவிஸ்), திமோ, குமணன் (ஜேர்மனி), ரங்கன், சாந்தி, யதீசன், துளசி, அமண்டா (U.K,), சமந்தா (U. K.), சுராஸ், சுரேன், றொபேட் (U. K.), ஸ்ரீவன் (U. K.) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார், அன்னாரின் ஈமக்கிரியைகள் 1990-03-09ந் திகதி வெள்ளிக்கிழமை கட்டுடை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாலை 3 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

உபதபாற்கந்தோரடி,
கட்டுடை,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தவர்கள்
(11968)

### சபாபதி கந்தசாமி
[சிற்பாச்சாரியார்]

யாழ்./திருநெல்வேலி காலஞ்சென்ற சிற்பாச்சாரியார் சபாபதி-சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் கந்தசாமி சிற்பாச்சாரியார் அகாலமரணமானார்.

அன்னார் கனகாம்பிகையின் அன்புக் கணவரும், சிவபாக்கியம், யோகம்மா, சிவரெத்தினம், பராசக்தி, தங்கப்பொன் (ஆசிரியை, யாழ்./நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கார்த்திகேசு, கந்தையா (திருமலை), இராசநாயகம், உத்தமசீலன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (09 03-1990) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
மனைவி, சகோதரர்கள்,

தலங்காவல் பிள்ளையார் கோவிலடி,
திருநெல்வேலி. [11969]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 9- 03 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org